# உழைப்பால் உயர்ந்த ஒருவர்

(புக்கர் தி. வாஷிங்குடன்)

சிவ குருநாதன்,
செந்தமிழ் நிலயம்.
கும்பகோணம்.


இயற்றியவர் :
அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்
பேராசிரியர்
Dr. A. சிதம்பரநாதச் செட்டியார், M.A., Ph. D.



பதிப்பாளர் :
எம். ஆர். அப்பாதுரை, B. A.,
13, முத்தியாலு செட்டித் தெரு.
புரசைப்பாக்கம் : : சென்னை—7.

விலை அணு 14.



மூன்றும் பதிப்பு, 1955.

Approved by the Text-Book Committee, Madras, for class use : Non-detailed study ; Vide Fort St. George Gazette, supplement to Part I-B of the consolidated list of Approved books 1954, dated the 19th May, 1954, page No. 84 of Part II.

Printed at The Premier Art Press, Madras—7.

## பொருளடக்கம்


| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| முன்னுரை | ... | 5 |
| 1. இளமையும் இன்னலும் | ... | 7 |
| 2. ஹேம்புடன் பள்ளியிற்கல்வி | ... | 26 |
| 3. பட்டம் பெற்றவர் | ... | 41 |
| 4. வாழ்க்கையின் அரிய தொண்டு | ... | 51 |
| 5. இன்னும் அத்தொண்டே | ... | 71 |
| 6. சொல் வன்மை | ... | 79 |
| 7. வாழ்க்கையின் பிற்பகுதி | ... | 90 |



புக்கர் தி. வாஷிங்குடன்

# உழைப்பால் உயர்ந்த ஒருவர்

## முன்னுரை

அடிமையிற்பிறந்து, அறியாமையில் தவழ்ந்து, வறுமையில் வளர்ந்து, இடுக்கண் பலவற்றைப் பொடியாக்கி, பிறந்த குடியை உயர்த்து நிறுத்திய பெரியாருள் ஒருவர் புக்கர் தி. வாஷிங்குடன் (Booker T. Washington) என்பவர்.

'அல்லல் ஒரு காலம்; செல்வம் ஒரு காலம்.' 'அடுத்து முயன்றால் ஆகாதனவும் ஆகும்.' 'முயற்சி பலன் தரும்.' 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?' 'பிறப்பினால் உயர்வு தாழ்வு அளக்கப்படாது.' என்பன போன்ற பல நீதிகளை விளக்குகின்றது அவரது வாழ்க்கை வரலாறு. கைத்தொழிலின் அழகையும் பெருமையையும் ஊதியத்தையும் உணர்த்துகின்றது இச்சரித்திரம். புத்தகப் படிப்பும் கைத்தொழிற்படிப்பும் ஒருங்கே தரப்படின், மாணவரெல்லாம் தாம் படித்த கலாசாலையின் பெருமையையும் பயனையும் உலகிற்கு எக்காலும் காட்டிக்கொண்டிருப்பர் என்பதற்கு அவர் நிறுவிய டஸ்கிகீ (Tuskegee) கல்லூரியின் மாணவர்களே சான்று. இடிந்து கிடந்த சந்தைக் கூடத்தில் ஒரு டாலர் காசின்றி 30 மாணவர்களோடு புக்கர் தொடங்கிய பள்ளிக்கூடத்திற்கு இலட்சக் கணக்கான பணம் சேரப் பெற்று, ஆயிரக்கணக்கான மாணவர்கள் அங்குக் கல்வி பெறுகிறார்கள் என்றால், புக்கர் வாஷிங்குடன் செய்த அரிய தொண்டின் அளவினை ஒருவாறு உணர்ந்துகொள்ளக்கூடும்.

புக்கர் ஓர் அரசரல்லர்; ஆயினும், அமெரிக்க (America) மக்களாலும், அரசரெனத் தக்காராலும் பாராட்டப்பட்டவர். ஐக்கிய மாகாணங்களின் தலைவரா யிருந்த மெக்கின்லி (Mr. Mckinley, President of the United States of America) என்பவரே புக்கரது சிறந்த அறிவையும் விடாமுயற்சியையும் பாராட்டி, "அவர் தேர்ந்த ஆசிரியர்; நல்ல சொல் வல்லார்; உண்மை உபகாரியர்," என்றெல்லாம் அவரைக் குறித்துக் கூறி யிருக்கின்றார் என்றால், வேறு பலபடக் கூற வேண்டிய அவசியம் இல்லை. இளமையிலே தம்பிடியின்றித் தரை யிலே கிடந்து பசியால் வாடிய புக்கர், பின்னாளிற் பல பட்டணங்களிலும் தமது சொந்த ஊரிலும் அவ்வம் மக்களால் வரவேற்கப்பட்டுப் பெருமைப்படுத்தப்பட்டார் என்றால், வேறு பல பகர வேண்டுமோ?

சுருங்கக் கூறின், 'பெரியார் எக்குடியிலும் பிறத்தல் கூடும்,' என்னும் உண்மையையும், மிகத் தாழ்ந்த குடியிற் பிறந்தாரும் தமது அருமுயற்சி, உழைப்பு இவை காரண மாக, உயர்ந்தவர் எனப்படுவார் அடையுஞ் சீருக்கும் சிறப்புக்கும் ஒப்பாகவோ மிகுதியாகவோ பீடும் பெருமை யும் அடைவர் என்னும் உண்மையையும் நன்று எடுத்துக் காட்டும் இவ்வரலாறு.


உழைப்பால் உயர்ந்த புக்கரது வரலாற்றைப் படிப் பதால், தமிழ் மக்கள் விழுமிய பயன் எய்துவார்கள் என்னுங் கருத்தான் இது வெளியிடப்படுகிறது.

ஆசிரியன்

## 1. இளமையும் இன்னலும்

சற்றேறத்தாழ முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே அமெரிக்கா (America) என்னும் தேசத்தில் சில சாதியார்கள் சென்று குடியேறினார்கள். அவர்களுள் ஆப்பிரிக்காவிலிருந்து சென்றவரை நீகிரோ (Negro) சாதியார் என்பார்கள். அச்சாதியார் சுமார் இருநூறு ஆண்டுகள் அடிமைகளாய் அந்நாட்டில் வருந்தி வேலை செய்து, சொல்ல முடியாத துயரத்தையும் துன்பத்தையும் அடைந்தவராய் இருந்தனர். அவ்வடிமைகள் எல்லாம் அடிமைத்தளையினின்றும் சில பெரியாருடைய கருணையால் விடுவிக்கப்பட்டார்கள். அப்பெரியாருள் ஒருவர் ஆபிரகாம் லிங்கன் (Abraham Lincoln) என்பவர். அவர் அமெரிக்காத் தேசத்து ஐக்கிய மாகாணங்களின் தலைவர் பதவியை ஏற்றுச் சில ஆண்டுகள் ஆனவுடன், ஒரு கட்டளை பிறப்பித்தார். அக்கட்டளைப்படி அடிமைகளெல்லாம் அந்நாள் தொட்டு எப்பொழுதும் சுயேச்சையுடையவர்கள் ஆனார்கள். அந்த நன்னாளே கி. பி. 1863-ஆம் ஆண்டு, சனவரி மாதம், முதல் தேதி. இந்த நன்னாளுக்கு முன்னால் அவ்வடிமைகள் பட்ட துயரத்துக்கு அளவில்லை.

புக்கர் வாஷிங்குடன் ஓர் அடிமையாகவே பிறந்தார். அஃதாவது, அவர் ஓர் அடிமைப் பெண்ணுக்கு



ஆபிரகாம் லிங்கன்

மகனாய்ப் பிறந்தார். அவர் தகப்பனார் இன்னாரென்பது அவருக்குத் தெரியாது. அவரது வாழ்க்கையின் எந்த நாளிலும் அத்தகப்பனார் புக்கரைப்பற்றி எந்தக் கவலையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. அவர் தாயோ, ஒரு தோட்டத்திற் சமையல் வேலை செய்து பிழைத்தவள். புக்கரோடு பிறந்தவர் இருவர். புக்கர் அவ்விரண்டு உடன் பிறந்தாரோடும் தாயோடும் ஓர் அறையின் தோட்டத்தின்கண்ணே வசித்து வந்தார். அவ்வறையின் நீளம் பதினாறு அடி; அகலம் பதினான்கு அடி. மழை வெயிற்காலங்களிலும் அவ்வறையிலேயே அவர்களெல்லாம் இருந்து வந்தார்கள். அவ்வறையின் தரை மண்ணால் ஆன தரை. அத்தரையின்மேல் சில அழுக்குக் கந்தைகளைப் பரப்பி, அவற்றின்மேலேயே அவர்களெல்லாம் படுத்துக்கொள்ள வேண்டிய நிலையில் இருந்தார்கள். குளிரிலும் பனியிலும் அவர்கள் உற்ற இன்னல் சொல்லுந் தகைத்தன்று. அவ்வறை அத் தோட்டத்தின் சமையலறையாயும் இருந்தபடியால், வெயில் வேளைகளில் அதிலிருந்து தாவின தீ அவர்களை யெல்லாம் வாட்டிற்று. புக்கரின் தாய் தன் ஆண்டானுக்குச் செய்ய வேண்டிய வேலைகளைச் செய்யுமுன் காலையில் சிறு பொழுதும், செய்த பின் இரவில் சிறு பொழுதும் தன் குழந்தைகளை நினைத்து உண்பிப்பது வழக்கம். ஒரு நள்ளிரவில் அவள் கோழிக் குஞ்சைச் சமைத்து, உறங்கிக்கொண்டிருந்த தன் குழந்தைகளை

எழுப்பி, உன்னை அழைத்தாள் என்றால், அவளது அன்பையும் வறுமையையும் என்ன என்பது! அவள் சிலகால் அரிதாகப் பெற்ற வெல்லப் பாகைத் தட்டில் ஊற்றும் பொழுது, புக்கர் கண்ணை மூடிக்கொண்டிருந்து பிறகு திறந்து பார்த்து, அதைத் தட்டு முழுவதும் பரப்பி, அதிகமாக்கிக்கொண்டதாக நினைத்துத் துளி துளியாக நக்கினாரென்றால், அவரது வறுமை நிலையைப் பெரிதும் எடுத்துரைக்க வேண்டா அன்றோ?

புக்கர் 1858லோ 1859லோ பிறந்தவர். நீகிரோ சாதியார் அடிமையினின்று நீங்கியது 1863ல் என்பது முன்னரே கூறப்பட்டது. எனினும், தமது நான்கு அல்லது ஐந்து வயதுக்குள்ளாக, புக்கர் எத்தனையோ அடிமை வேலைகள் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. பெரிய ஆள் அல்லரேனும், அவர் கொல்லை கொத்துவதிலும் வயலில் வேலை செய்பவருக்குத் தண்ணீர் தூக்கிக் கொண்டு சேர்ப்பதிலும், கூலங்களை அரைக்கும் பொறி நிலையத்திற்குப் போய் வருவதிலும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டார். பொறி நிலயத்திற்குப் போய் வருதல் எளிதன்று. தோட்டத்திலிருந்து மூன்று கல் தொலையில் மில் இருந்தது. மூட்டையை ஒரு குதிரை மீது தூக்கிப் போட்டுக்கொண்டு போனால், வழியில் அம்மூட்டை நழுவி விழாத நாள் ஒரு நாளும் இல்லை. சிறுவராகிய அவருக்கு அதைத் தூக்கி மேலே மீண்டும்

போடக்கூடிய ஆற்றல் இல்லை. அதனால் வழிப்போக்கர் வருவாரா எனப் பல மணி நேரம் அத்தன்னந்தனியான வழியில் அவர் நிற்க நேரிடும். மாலையில் பொறி நிலையத்தைச் சேர்ந்தால், வீடு திரும்புவதற்குள் இருட்டி விடும். வழியோ, காட்டு வழி. நீகிரோ சாதியார் என்று கேட்ட மாத்திரத்திலேயே, அவர்தம் காதை அறுக்கும் பழைய பட்டாளத்தார் பலர் அவ்வழியே வருவர். இவற்றிற்கெல்லாம் தப்பித் திரும்பினால், தோட்டம் சேர்ந்தவுடன், நாழி கழித்து வந்ததற்காக அடியோ உதையோ உறுதியாக உண்டு.

இங்ஙனம் காலங்கழித்து வருங்கால் சிற்சில வேளைகளிற் புக்கர் தம் எசமாட்டியின் புத்தகங்களைப் பள்ளிக்கூடம்வரை எடுத்துக்கொண்டு போய்க் கொடுத்து வருவதுண்டு. அவ்வேளைகளில், அப்பள்ளிக்கூடத்தில் சிறுவர்களும் சிறுமிகளும் படிப்பதைக்கண்ட புக்கர், அவர்களுள் தாமும் ஒருவராகப் படிக்க விடப்பட்டால், அது தாம் வானுலக இன்பம் பெற்றதாகும் என நினைத்ததுண்டு.

புக்கரின் ஆண்டானுடைய வீட்டைப் ‘பெரிய வீடு’ என்று கூறுவார்கள். அவ்வீட்டிற்குப் போய், சாப்பாட்டு மேசைமீது மொய்க்கும் ஈக்களை ஓட்டுவதற்காகப் புக்கர் பல வேளைகளில் விசிறி போடும்படி ஆணை

யிடப்பட்டார். ஒரு நாள் இளைய எசமாட்டியர் இருவர் சில விருந்தினரோடு இஞ்சிப்பணியாரம் சாப்பிட்டுக் கொண்டிருந்ததைக் கண்ட புக்கருக்கு, அதைப்போலத் தாமும் விடுதலை அடைந்த பின் உண்ணவேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று.

உண்பதற்கே இல்லையென்றால், உடுக்க எங்கே இருக்கும்? முரட்டுச் சணலால் ஆகிய சட்டைதான் அவருக்கு உண்டு. அடிமைகள் எல்லோருமே அக்காலத்தில் அதைத்தான் அணிய வேண்டும். ஒரு புதுச் சணற் சட்டையைப் போட்டுக்கொள்வதற்கு ஒப்பான துன்பம் பல்லைப் பிடுங்குவதால் வருந் துன்பம் எனின், அச் சட்டையின் இனிமையை அறியலாம். நூறு குண்டூசிகள் உடலுடன் ஒட்டிக்கொண்டிருந்தால் எப்படியிருக்குமோ, அப்படி அச்சணற்சட்டை இருந்தது எனின், அதன் நயத்தை என் சொல்வது!

இத்துன்பங்கள் எல்லாவற்றையும் போக்கிய ஒரு நன்னாள் வந்தது. அடிமைகள் எல்லாம் விடுதலையடைந்தார்கள். புக்கர் இருந்த வர்சீனியா (Virginia) த் தோட்டத்து அடிமைகளும் தளையினின்று விடுபட்டார்கள். அப்பொழுது புக்கரின் தாய் தன் குழந்தைகளை அணைத்துக்கொண்டு உவகைக் கண்ணீர் சொரிந்தாள். இந்த நாள் விரைவில் வரவேண்டுமென்றுதான் அவள்

நெடுங்காலம் இறைஞ்சி வந்தாள். அவளும் மற்றைய அடிமைகளும் ஆடினார்கள்; பாடினார்கள்; வாழ்த்தினார்கள். இந்த மகிழ்ச்சி சற்று நேரங் கழித்து அடங்கத் தொடங்கிற்று. காரணம், குழந்தை குட்டிகளைப் பாது காக்க வேண்டுமே, தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டுமே என்ற எண்ணம் வந்து குடி கொள்ளத் தலைப்பட்டதேயாம். வீடு வாசல், வாழ்க்கை முறை, குழந்தை வளர்ப்பு, கல்வி, குடிமை, நோயி லெடுத்தல் முதலான செய்திகள் எல்லாம் அவர்முன் தோன்றின. எழுபது, எண்பது ஆண்டுகள் அடிமைக ளாகவே தம் வாழ்நாள் முழுதுங் கழித்த முதியோர் சிலர், மீண்டும் 'பெரிய வீட்டை' நோக்கிச் சென்று, தமது பழைய ஆண்டானிடம் தமது பிற்கால வாழ்க் கையைக் குறித்து மறைவிற் சூழத் தொடங்கினர். கட்டவிழ்த்த மாக்கள் போன்று முதலில் அவர்கள் துள்ளிக் கூத்தாடினார்கள். உண்மையிலேயே தளை போய்விட்டதா என்று ஓடியாடி உணர்ந்து பார்த்தார் கள்; இப்பொழுது விடுதலை தங்களதே எனக் கண்ட பிறகு தங்கள் பொறுப்பை நோக்கிக் கவலையுடன் நினைக்கலுற்றார்கள்.

புக்கரின் சிறிய தந்தையார், ஏதோ ஓரூரில் முன் அடிமையாய் இருந்தவர், இப்பொழுது புக்கரின் தாய் முதலானவர்களைத் தம்மிடத்திற்கு அழைத்தார். எழு

நூறு கல் எல்லையுங் கால் நடையாகச் சென்று தாயுஞ் சேய்களும் மால்டன் (Malden) என்ற நகரைச் சேர்ந்த னர். சிறிய தகப்பனுர், புக்கரையும் அவருடன் பிறந் தாரையும் தாம் வேலை செய்துவர ஏற்பாடு செய்திருந்த உப்புலைக்களத்தில் வேலை பழக விட்டார். புக்கர் காலை நான்கு மணி முதல் அவ்விளமையிலேயே வேலை செய்ய வேண்டி ஏற்பட்டது. இளம்பருவந்தொட்டே புக்க ருக்குப் படிக்கவேண்டும் என்ற பெருவிருப்பம் உண்டு. தாயின் உதவியால் புக்கர் முதற்பாட புத்தகம் ஒன்று பெற்ருர். அதனைப் பிறர் உதவியின்றி அவரே எழுத்துக் கூட்டிப் படித்துப் பழகிக்கொண்டார். பக்கத்தில் எழு தப் படிக்கத் தெரிந்த தம்மினத்தார் இருந்தாலன்ருே அவர் இவரை அணுகியிருக்கக்கூடும் ? வெள்ளையரிடம் போய்க் கேட்பதற்கோ, புக்கருக்கு அச்சம் உண்டா யிற்று. புக்கர் படிக்க வேண்டுமென்ற பேராவலோடு இருந்து வரும் நாளில் ஒரு நாள், நீகிரோச் சிறுவன் ஒரு வன், ஓகியோ (Ohio) என்ற ஊரிலிருந்து வந்து சேர்ந் தான். அவனுக்கு எழுதப் படிக்கத் தெரியும். அதை அறியவந்த மால்டன் நகரத்து நீகிரோமக்கள் அவனிடம் ஒரு செய்தித் தாளை நாடோறும் வேலை முடிந்த பிறகு கொடுத்துப் படிக்கச்செய்து கேட்கத் தொடங்கினுர்கள். இப்படிச் சில நாள் கழிந்து வருங்கால், நீகிரோ வகுப் பாருக்கென்று அவ்வூரில் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்த வேண்டும் என்னும் எண்ணம் ஊராரிடையே எழுந்தது.

சொல்லிக்கொடுக்க ஒருவரைத் தேடிக்கொண்டிருந்தார்கள். ஒகியோவிலிருந்து வந்தவனுடைய இளமை அவன் கணக்காயர் தொழிலைப்பெற இடம் தாராதாயிற்று. வேறு ஒருவர் ஒகியோவிலிருந்து தற்செயலாய் வந்து சேர்ந்தார். அவரைக்கொண்டு ஒரு பள்ளிக்கூடம் தொடங்கப்பட்டது. அவ்வாசிரியர் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீட்டிற் சாப்பிட்டு வரவேண்டுமென்றும், அதைத் தவிர்த்து அவருக்கு ஒவ்வொரு வீடும் சிறு தொகையை மாதாமாதம் கொடுக்க வேண்டும் என்றும் ஏற்பாடாயிற்று. ஆசிரியருக்கு உண்டியில் குறைவு ஒன்றும் இல்லை. ஒவ்வொரு வீட்டாரும் சிறந்த வழியில் அவருக்கு உணவளிக்க நினைத்தமையால், குறைவு எப்படி உண்டாம்? 'கணக்காயர் நாள்' என்று வருமென்று எதிர்பார்த்து நின்றார் புக்கரும் பிற மாணவரும் என்றால், ஆசிரியருக்கு இன்னடிசில் படைக்கப்பட்டமை அறியப்படாதோ? கணக்காயர்கள் கிடைக்கக் கிடைக்கப் பகற்பள்ளிக்கூடங்கள், இரவுப் பள்ளிக்கூடங்கள், ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்கூடங்கள் எல்லாம் எழத்தொடங்கின. அறுபது, எழுபது வயதுள்ள மாந்தரும் பள்ளியிற்சேர்வாராயினர். இம்மக்களுடைய கருத்து, தாம் இறக்குமுன் தமது வேத புத்தகத்தைப் படிக்கத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதே.

அந்த எல்லையிற் பள்ளி ஏற்படுத்தப்பட்டும், அதனால் உள்ள பலனைப் புக்கர் அடைய முதற்கண் இயலவில்லை. சிறிய தகப்பனார், புக்கர் உலைக்களத்தில் வேலை செய்து கொஞ்சம் கூலி பெற்றுத் தருவதை நினைத்து, அவர் படிக்கப்போனால் தாம் அந்தக் காசை இழக்க வேண்டுமே எனக் கருதி, அவரைப் பள்ளிக்கு அனுப்ப மறுத்துவிட்டார். புக்கருக்கு வந்த ஏமாற்றம் இவ்வளவு அவ்வளவு அன்று. அப்பள்ளிச் சிறுவர்கள் காலை மாலையிற் செல்லும் வழியில் அவ்வுலைக்களம் இருந்தபடியால், அவர் அச்சிறுவரைப் பார்க்கும் பொழுதெல்லாம் மிகவும் வருந்தி வருந்தி உளைந்தார். ஆயினும், எப்படியாவது படித்துத் தீர்ப்பது என்று கங்கணம் கட்டிக்கொண்டு, அவர் முதற்பாட புத்தகத்தை நன்றாகக் கற்க முற்பட்டார். கல்வி கற்கும் முயற்சியில் புக்கர் தம் தாயினுடைய முழு ஆதரவைப் பெற்றிருந்த படியால், சின்னாட்சென்ற பின் ஓராசிரியரைத் தமக்கு இரவிற் பாடம் கற்றுத்தர ஏற்பாடு செய்துகொண்டார். ஆனால், பகற்பள்ளிக்குச் சென்று முழு நேரம் படிக்கவேண்டும் என்ற எண்ணம் அவரைவிட்டு அகலவில்லை. பின்னர், ஆண்டுதோறும் குறிப்பிட்ட சில மாதங்களில் அதிகாலையில் எழுந்து, ஒன்பது மணிவரை உலைக்கள வேலைபார்த்துப் பள்ளிக்குச்சென்று மாலையில் திரும்பி வந்ததும், இரண்டு மணி வேலை மீண்டும் பார்க்க வேண்டும் என்ற திட்டத்தை ஏற்படுத்திக்

கொள்ள அவர் முயன்று வெற்றியுற்றார். இத்திட்டத்திலும் ஓர் இடுக்கண் இருந்தது. பள்ளிக்கூடம் திறப்பதும் ஒன்பது மணிக்கு; உலைக்கள வேலை முடிவதும் ஒன்பது மணிக்கு. பள்ளிக்கூடமோ, உலைக்களம் இருக்கும் இடத்திற்கு அண்மையில் இல்லை. சில நாட்சென்று, தாம் காலந்தாழ்த்துப் போனதைப் புக்கர் அறிந்தார். இத்தொல்லையினின்று நீங்க அவர் ஒரு சூழ்ச்சி செய்தார்: உலைக்கள நிலையத்திற் பெரிய கடிகாரம் ஒன்று உண்டு. நேரத்திற் பள்ளிக்கூடம் சேர வேண்டி, அவர் நாடோறும் காலை எட்டரை மணிக்கெல்லாம் கடிகார முள்ளை ஒன்பதில் வைத்து வரலானார். இங்ஙனம் செய்து வருங்கால் ஒரு நாள் உலைக்களத் தலைவர் ஐயம் கொண்டு கடிகாரத்தைப் பூட்டி வைத்துவிட்டார். முள்ளினைத் திருப்பி வைத்ததனால் எவருக்கும் இன்னல் இழைக்க நினைத்தாரல்லர் புக்கர். அவர் நினைத்ததெல்லாம் நேரத்திற் பள்ளிக்கூடம் சேர வேண்டும் என்பதே; அதற்காகப் பின்னர் வருந்தினார்.

புக்கர் பள்ளிக்கூடம் முதல் முறையாகச் சென்றதும் மாணவரெல்லாம் தலையில் தொப்பி போட்டிருந்ததைக் கண்டார். புக்கருக்கோ, தொப்பியுமில்லை; தலைப்பாகையுமில்லை. அவர் சில நாள் வெறுந்தலையுடன் சென்றார். எல்லாப் பிள்ளைகளும் தலையை மூடிக்கொண்டிருப்பதைக் கண்ட அவர், தாயிடம்

வந்து, தம் குறையை முறையிட்டார். கேட்ட தாய், கடன் வாங்க மனமில்லை எனக் கூறித் தன்னிடம் உள்ள இரண்டு துணித் துண்டுகளைக் கொண்டு தொப்பி போன்றது ஒன்றைத் தைத்துக் கொடுத்தாள். அதையணிந்து புக்கர் பள்ளிக்குச் செல்லலானார். அவரை மாணவர் சிலர் ஏளனஞ் செய்தனர். அவர் தாய் தன்னால் வாங்க இயலாத காலையில் ஒரு தொப்பி வாங்க இசைந்தவள்போலக் காட்டாதிருந்தது அவளது அருங்குண பலத்தைக் காட்டுகிறது. பின்னால் வித விதமான குல்லாய்களும் தொப்பிகளும் புக்கருக்குக் கிடைத்திருந்தாலும், தாய் செய்து தந்த அத் துணிக் குல்லாய்க்கு அவை ஈடாகா என அவர் நினைத்திருந்தார். அவரை ஏளனஞ் செய்த சிலர், முன்னால் நல்ல தொப்பி போட்டிருந்தும், பின்னுளில் யாதொரு தொப்பியும் வாங்கக் காசற்றவராய்க் கழிய, வேறு சிலர் தம் வாழ்க்கையைச் சிறைச்சாலையிற் கழிக்க வேண்டியவர் ஆயினர். இதை நினைக்கும் பொழுது புக்கருடைய தாயின் உளவரை தூக்கிய ஒப்புரவாண்மை போற்றப்படுதல் ஒருதலை.

புக்கரின் இன்னொரு தொல்லை அவரது பேரைக் குறித்தது. அக்காலை, அப்பள்ளியிற்சேர்ந்த மாணவரெல்லாரும் குறைந்தது இரண்டு பெயர் தாங்கியிருந்தனர். புக்கரின் பெயர் எழுதப்படும் நேரம் வந்ததும்.

இரண்டு பெயர் வேண்டுமே எனக் கருதிப் புக்கர் மெல்லிய குரலில் 'புக்கர் தி வாஷிங்குடன்' (Booker T. Washington) எனக் கூறிவிட்டார். அப்பெயராலே தான் அவர் இந்நாள்காறும் அறியப்பட்டு வருகிறார். புக்கர் தமக்குத் தாமே பெயர் இட்டுக்கொண்ட விதமாகத் தமக்குப் பெயரிட்டுக்கொண்ட பிறர் அத்தேசத்திற் பலரல்லர் என்று சொல்லலாம்.

புக்கர் வாஷிங்குடன் படித்து வரத் தொடங்கிய சில மாதத்துக்கு அப்பால் அப்பள்ளிக்கூடத்தை அவர் விட்டுவிட நேரிட்டது. அவரது பகல் நேரம் முழுதும் உப்புக்கள வேலையிற் செலவிடப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. யாது செய்வார் வாஷிங்குடன்! இரவிலாகிலும் எப்படியாவது படித்தே முடிப்பது என்று அவர் உறுதி செய்துகொண்டார். அதன்படி பகல் வேலை முடிந்ததும், கணக்காயர் ஒருவரிடம் கற்று வரலானார். பல கல் எல்லையைக் கடந்து சென்று தம் பாடங்களை இரவில் அவர் ஒப்பித்து வருவார். இதனிடையே உப்புக்களத்தில் வேலை பார்த்து வந்த அவரை நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை செய்யும்படி பணித்தார்கள். அச்சுரங்க வேலை எளிதன்று. அவ்வேலை செய்பவர் உடலைத் தூய்மையதாக வைத்துக் கொள்ள முடியாது. வேலை முடிந்து வீடு திரும்பிய பின்னும் உடம்பின் அழுக்கைப் போக்க முடியாதென்

ருல், அக்கரையின் தன்மையை என்னென்பது! சுரங்க வாயிலிலிருந்து கரியுள்ள இடம் சேர ஒருமைல் தூரம் உள்ளே இருட்டிற் செல்ல வேண்டும். உள்ளே பல அறைகள் இருந்தன. ஓரறைக்குப் போக வேண்டிய வாஷிங்குடன் வழி தப்பி வேறோர் அறைக்குப்போய்த் தவித்த சமயம் பல. கையிலுள்ள விளக்கு அவிந்து போய், நெருப்புக் குச்சியும் அற்றுத் தவித்த சமயம் பல. அவ்வேலை கடினமானது என்பது மாத்திரமன்று; அஃது அபாயகரமானதும் ஆகும். வேலை செய்துகொண் டிருக்குங்காலே திடீரென்று எங்கேனும் வெடித்து ஆட்கள் தூளாக்கப்படுவர். இத்தகைய சுரங்க வேலை யைச் சின்னாள் வாஷிங்குடன் செய்து வருவாராயினர்.

அவரைப் போன்று அவ்வேலையை அங்குச் செய்த மாந்தர் பலர். சிறு மகாரையும் அவ்வேலையைச் செய்யு மாறு கட்டாயப்படுத்தி அவர்களது ஆயுளையே ஆங்குக் கழிக்கும்படி செய்து, கல்வியின் வாசனை அறிய ஒரு வாய்ப்புங் கொடாதிருந்தனர் என்பதைக் கண்ட வாஷிங்குடன் நெஞ்சு புண்ணாயிற்று. இதைக்குறித்து அவர் அடிக்கடி எண்ணியெண்ணிப் புண்ணுற்றார். நிலக்கரிச் சுரங்கத்து வேலையில் வாழ்க்கையைத் தொடங் கும் இளஞ்சிறுவர்கள், உடல் நிலையிலும் மன நிலையி லும் குறைமையை அடைகிறார்கள். சுரங்க வேலையையே செய்வது என்பதைத் தவிர்த்து வேறொரு குறிக்கோள்

அவர்களுக்குத் தோன்றுவதில்லை. தனது குறிக்கோள்களைப் பொறுத்தும், முயற்சிகளைப் பொறுத்தும் யாதோர் எல்லையும் வகுக்கப்படாது செல்ல விடப்படுகிறான் வெள்ளைச் சிறுவன். சட்டசபை அங்கத்தினராகவோ, கவர்னராகவோ, அத்தியக்ஷ குருவாகவோ, பிரஸிடெண்டாகவோ நினைக்கும் ஒரு வெள்ளைச் சிறுவன் வழியிலே சாதி பிறப்புக்களால் ஆன முட்டுக்கட்டைகள் இல்லை. அம்முட்டுக்கட்டைகள் நீகிரோவர்க்கும் இல்லையானால், அடியிலிருந்து தொடங்கி உயர்ந்துகொண்டே சென்று முடியை அவர் அடைய மாட்டாரா? செயற்கருஞ்செயல்களைப் புரிந்து அவற்றால் தமக்கு ஒரு பேருண்டாக்கி, அப்பேரால் தம் சந்ததியாரைப் பெருமிதம் அடையவும், பேருக்கம் அடையவும் செய்யவேண்டும் என்ற எண்ணம் புக்கருக்குத் தோன்றிற்று.

நீகிரோச் சிறுவனைக் குறித்து வெகு விரைவிலும், வெகு கடினமாகவும் உலகம் தீர்ப்புக் கூறக் கூடாது. வேறு சிலருக்கு இல்லாத பல இடர்ப்பாடுகள், மயக்கங்கள், அதைரிய போதனைகள் இவற்றினெதிரே அவன் போர் புரிய வேண்டிய நிலையில் இருக்கிறான். வெள்ளைச் சிறுவன் ஒரு செயலை மேற்கொண்டால், அவன் வெற்றியுற முடிப்பன் என்று உலகு உடனே எண்ணி விடுகிறது. ஆனால், நீகிரோச் சிறுவன் தோல்வியுறு

விட்டால் உலகு வியப்புறுகிறது! அவன் தொடங்கும் பொழுதே வெற்றியுற மாட்டான் என்ற ஒருணர்ச்சி எப்படியோ பிற மக்கள்பால் வலுத்துப்போயிருக்கிறது. வெள்ளைச் சிறுவன் வெற்றியடையாவிட்டால், அவனது பெருங்குடிப்பெயர் வடுப்படுமே என்றதோர் உணர்ச்சி, அவன் மயக்கவுணர்வினின்று விடுபடப் பேருதவியாய் இருக்கிறது. தன் முன்னும் தன்னைச் சுற்றியும் உள்ள குடிப்பெருமையும் குடி வரலாறும் அவன் இடர் களைப் பொடிபடுத்த உதவும் கருவிகளாய் உள்ளன. இங்ஙனம் எண்ணினர் புக்கர்; வெற்றி எனப்படுவது அடைந்துள்ள ஓர் உயர்பதவியால் அளக்கப்படுவதன்று என்பதைப் பின்னளில் அறிந்தார். முயன்றவன் எவ் வளவு இடுக்கணைப் பொடியாக்கி, எத்துணை முட்டுக் கட்டைகளைத் தகர்த்தெறிந்தான் என்பதைக்கொண்டே வெற்றி எனப்படுவது உறுதி செய்யப்படும் என்பதை யும் அறிந்தார். இம்முறையே நோக்கினல், நீகிரோச் சிறுவனது பிறப்பு அவனுக்கு நலம் பயப்பது என்றே சொல்ல வேண்டும். தான் மதிக்கப்படும்பொருட்டு அச் சிறுவன் வெள்ளையனைவிட நன்ருகவும் திருத்தமாகவும் தன் வேலைகளைச் செய்தாக வேண்டும். கடினமான போரிடையே அவன் செல்லவேண்டியிருப்பதால், பிறர் சிலர்பால் காணப்படாத பலமும் நம்பிக்கையும் அவ னுக்கு உண்டாகின்றன. ஆதலின், உழைப்பும் முயற் சியும் நலம் பயக்குமன்றிப் பிறப்புப் பயவாதென்பதைப்

புக்கர் பின்னுளிலே அறிந்துகொண்டார்.

சுரங்கத்தில் வாஷிங்குடன் வேலை பார்த்து வரும் பொழுது ஒரு நாள் ஒரு செய்தியைக் கேள்வியுற்றுர். அஃதாவது, ஹேம்புடன் (Hampton) என்ற ஊரில் ஒரு பள்ளிக்கூடம் நீகிரோவருக்காக அமைக்கப்படும் என்பது. அந்தப் பள்ளிக்கூடத்திற் சேரும் ஏழை மாணவர் ஏதேனும் ஒரு வேலை செய்து தத்தம் உண்டிக்கு வேண்டிய பணத்தை முழுதுமோ பாதியோ பெற்றுவிடக்கூடும் என்றும், அப்பள்ளிக்கூடத்தே அம் மாணவர் ஏதேனும் தொழிற்கல்வியை அதே வேளையிற் பெறக்கூடும் என்றும் சிலர் பேசிக்கொண்டிருந்தது வாஷிங்குடன் செவியிற்பட்டது. அது முதல், அவர் சிந்தையெல்லாம் ஹேம்புடன் பள்ளியிலே சென்றது. அதுவே உலகிலுள்ள பல இடங்களிலும் சிறந்த இடம் என அவருக்குத் தோன்றிற்று. அதன்பால் அவருக்கு எழுந்த ஆசை, விண்ணுலகின்பால் தோன்றக்கூடியதை விட மிக்கது. எப்படியாயினும் அப்பள்ளியிற் சேர்ந்து விடுவது என்ற உறுதிக்கு வந்துவிட்டார். அவர் இந்தத் தீர்மானஞ் செய்துகொண்ட பொழுது, அந்தக் கல்லூரி எங்கேயுள்ளது, எவ்வளவு தொலையில் உள்ளது, அங்கு எங்ஙனஞ் சேர்வது என்ற செய்திகளைப் பற்றிய எண்ணமே அவருக்கில்லை. ஆனல், "ஹேம்புடன் போகாமலிருப்பேனே? போயே தீர்வேன் !" என்று அவர்

அல்லும் பகலும் நினைத்து வந்தார்.

இப்படியிருக்குங் காலத்திலே அவர் சுரங்க வேலையை விட்டு நீங்கற்குரிய காலம் வந்தது. தம் தாயின் செல்வாக்கின்பேரில் ரப்னர் (Mrs. Ruffner) என்ற பெண்மணியிடத்தில் மாதம் ஐந்து டாலர் சம்பளத்தில் ஆளாய் அமர்ந்தார் வாஷிங்குடன். அம்மாதரசியிடம் வேலைபார்ப்பது மிகமிகக் கடினமானது என்று ஊரெல்லாம் பேச்சு எட்டியிருந்தது. அஞ்சா நெஞ்சுடன் வாஷிங்குடன் அம்மகளிடத்து வேலைக்கு அமர்ந்தார். அமர்ந்து சில நாள் ஆனதும், அவ்வம்மை முதன்மையாக வேண்டுவது சுற்றுமுற்றும் துப்புரவாக வைத்திருத்தல் என்றும், வேலைகள் எல்லாம் நேரத்திற் செவ்வனே செய்யப்பட வேண்டும் என்ற கொள்கை அவ்வம்மாளிடம் குடிகொண்டிருந்தது என்றும், நேர்மையான ஒழுக்கமும் சிறந்த மனமுமே வேலையாட்களிடம் அவ்வம்மை எதிர்பார்த்ததவையென்றும் வாஷிங்குடன் கண்டுகொண்டார்; அவ்வாறே ஒழுகி, தமது ஊக்கத்தாலும் ஒழுக்கத்தாலும் நல்ல பெயர் எடுத்தார்; இப்பொழுது நாடோறும் இரண்டொரு மணி நேரம் பள்ளி சென்று பயின்று வருவதற்குக்கூட இசைவு பெற்றுவிட்டார் அவ்வெசமாட்டியிடம்; ஒரு சிறு புத்தகசாலையுந் தமக்குச் சொந்தமாக அமைத்துக்கொண்டுவிட்டார். கிடைத்த கிடைத்த புத்தகத்தையெல்லாம் ஒரு

கள்ளிப் பெட்டி அலமாரியிற் சேர்த்து வைத்து, அதனையே தமது புத்தக நிலையம் என்பாராயினர். பள்ளிக்குப் போய்வந்த பிறகு வீட்டிலும் ஓர் ஆசிரியர் இரவில் வந்து சொல்லிக்கொடுக்குமாறு ஏற்பாடு செய்து கொண்டார். இச்செயல்களிலெல்லாம் எசமாட்டியின் ஆதரவை அவர் பெற்றே இருந்தார். அவ்வளவுக்குங் காரணம், அவர்தம் உழைப்பும் உற்சாகமும் நேர்மையுமே ஆகும்.

## 2. ஹேம்புடன் பள்ளியிற்கல்வி

இவ்வாறு எத்தனை படித்தும் வாஷிங்குடனுக்கு ஹேம்புடன் செல்லாமல் மனவமைதி உண்டாகவில்லை. இறுதியில் 1872-ஆம் ஆண்டில், அதாவது அவருடைய பதினைந்தாவது வயதில், வாஷிங்குடன் ஹேம்புடன் போகப் புறப்பட்டார். தம் கையில் வேண்டிய காசு இல்லாதபடியால், தாயின் அரைகுறை இணக்கமே அவருக்குக் கிடைத்தது. அவர் தமது குறைந்த கூலியிலிருந்து குடும்பத்திற்காகக் கொடுத்தது போக எஞ்சி நின்றது அற்பமே. அவருடன் பிறந்த ஜான் (John) என்பார், தமது ஊதியத்திலிருந்து சிறிதே கொடுக்கக்கூடியவராயிருந்தார். எனினும், புறப்பாடு உறுதி செய்யப்பட்டுவிட்டது. புறப்படும் நேரமும் வந்துவிட்டது. அவ்வேளையிற் பார்க்க வேண்டுமே அவ்வூர் நீகிரோக்களை! எத்தனை ஆண்டுகள் அடிமைகளாய்ப் படிப்பு வாசனை அறியாது இருந்தவர்கள் அவர்கள் எல்லாம்! இப்படித் தம் வகுப்பினருள் ஒருவன் படிக்கவும் ஊர் விட்டுப் பிரிவான் என்று கனவிலும் நினையாத அம்முதியார் பலர்க்கு அக்காலை இருந்த கிளர்ச்சியும் மலர்ச்சியும் சொல்ல ஒண்ணா. அவர்களெல்லாம் வாஷிங்குடனுக்கு ஒன்று, அரை, கால் என்று நிக்கல் நாணயங்களையோ, கைக்குட்டைகளையோ கொடுக்கலானார்கள். ஒரு சிறு

பெட்டியோடு அவரும் புறப்படலானார்; மெலிந்திருந்த தாயை அரிதிற்பிரிந்து சென்றார்.

அவரது ஊரிலிருந்து ஹேரம்புடன் ஐந்நூறு கல் தூரம். வழி முழுதும் அப்பொழுது புகை வண்டி இல்லை. தொலையிற்பாதி குதிரை வண்டியிற் சென்றாக வேண்டும். ஊரினை விட்டுச் சிறிது தொலை சென்றதுந் தான் ஹேரம்புடன் சேர்வதற்கு வேண்டிய அளவு பிரயாணக் காசு கையில் இல்லை என்பது புக்கருக்குப் புலப்பட்டது. சிறிது தூரம் குதிரை வண்டிக்குக் காசு கொடுத்து அதில் ஏறிச் சென்ற பிறகு, இன்னுஞ் சிறிது தூரம் நடந்தும், அதன் பின் வண்டிகளில் தம்மை ஏற்றிச் செல்லுமாறு உரியாரை இரந்தும், முடிவில் ரிச்சுமாண்டு (Richmond) என்னும் ஊரை அடைந்தார். ஆனால், ஹேரம்புடனுக்கு இன்னும் எண்பத்திரண்டு கல் தூரம் இருந்தது. களைத்துத் தவித்துப் பசித்து ரிச்சுமாண்டை அவர் அடைந்த நேரமோ, நள்ளிரவு. அதுவோ, ஒரு பெருநகரம். அவரோ, பெருநகரத்துக்குப் புதியவர். கையிற் காசில்லாத அவர்க்குத் தங்குதற்கு இடமளிப்பார் அந்நகரில் இல்லை. கடைத்தெரு வழியே அவர் சென்ற பொழுது அவர் கண்முன் தென்பட்ட தின்பண்டங்களைக் கண்டு அவர் மனம் வாடியது. தமக்குப் பின்னால் வரப் போவதையெல்லாம் வாக்களித்தாவது அவற்றுட் சிலவற்றைப் பெறலாகாதா என்ற எண்

ணம் அவருக்கு எழலாயிற்று. அத்தின்பண்டம் எதுவும் அவர் பெற்றாரில்லை; வேறெதுவும் தின்னும் பொருட்டுக் கிடைக்கவும் இல்லை. நள்ளிரவுக்குப் பின்னும் அவர் நடக்க வேண்டி நேரிட்டது. இறுதியில், இனி நடக்க முடியாது என்று களைத்து அலுத்து ஓய்ந்து போய் ஓரிடத்தில் உட்கார்ந்தார்; பின்பு தளத்தின் அடியில் ஒரு பொந்து இருக்கக்கண்டு, அதனுட்புகுந்து படுத்துக்கொண்டார். அத்தளத்தின்மீது பல மக்கள் நடந்து சென்றார்கள். அவர்கள் அடியிட்ட ஒலியெல்லாம் அவர் இரவு முழுதும் கேளாது இருந்திருக்க முடியாது. காலையில் எழுந்ததும், தீ வேட்கைப் பசியைப் போக்கிக்கொள்ள வழியில்லையே என்ற திகைப்பே அவருக்கு இருந்திருக்க வேண்டும். எழுந்தவுடன், தாம் ஒரு கப்பலின் அருகே இருப்பதையும், அக்கப்பலிலிருந்து பொருள்கள் இறக்கப்படுவதையும் கண்டார். உடனே ஆண்டு ஓடி வங்கத்தலைவனை ஒன்று வேண்டிக் கொண்டார். அவனும் மனமுவந்து இசைந்தான். இப்பொழுது வாஷிங்குடன் கப்பற்பண்டங்கள் சிலவற்றைக் கீழே இறக்க உதவி புரிந்து, தமது காலையுண்டிக்கு வேண்டிய பொருளைப் பெற்றுக்கொண்டுவிட்டார். அக்காலையுண்டி அவரது தாளாண்மையால் வந்ததால், அவருக்குப் பேருவகை அளித்தது. எத்தனையோ ஆயிரம் அருமையான சிற்றுண்டி விருந்துகள் அவருக்குப் பின்னாட்களில் அளிக்கப்பட்டன ஆயினும், அன்று

அவரது கைத்தொழிலாற் கிடைத்த சிற்றுண்டிக்கு அவையெல்லாம் ஈடாகா அல்லவா? "தெண்ணீர் அடுபுற்கையாயினும், தாள் தந்தது உண்ணலின் ஊங்கு இனியது இல்," என்று திருவள்ளுவர் கூறிய வாய் மொழி எந்நாட்டிற்கும் ஏற்கும் என்பது இதனாலும் புலப்படுகின்றது.

இது நிற்க. புக்கருக்கு இடப்பட்ட வேலையை அவர் செவ்வனே செய்ததற்கு மகிழ்ந்து கப்பற்றலைவன் நாடோறும் வேண்டுமானாலும் கூலிக்கு அங்கு வேலை தருவதாகக் கூறினான். அவ்வாறே அவ்வேலையை ஒப்புக்கொண்டு புக்கர் சில நாள் வேலைசெய்து, பிறகு தாம் குறித்த ஊரை நோக்கிப் புறப்படலானார். விரைவில் ஹேம்புடன் வந்து சேர்ந்து பள்ளிக்கூடக் கட்டடத்தைக் கண்டவுடனே அளவிலா மகிழ்ச்சி எய்தினார். பெரியதாயும், கல்லாற் கட்டப்பட்டதாயும், மூன்று மாடம் உடையதாயும் இருந்த அக்கட்டடத்தை முதன் முறையாக அவர் கண்ட பொழுது அவருக்குண்டான மகிழ்ச்சியைக்கொண்டு அளவிட்டால், பள்ளிக் கட்டடங்கள் கட்டுதற்குப் பெரும்பணம் அளிக்கும் அறவோர் பின்னும் பேருக்கம் உடையவராவர் என்பதில் ஐயமில்லை.

பின்பு புக்கர் தம்மை வகுப்பிற் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டித் தலைமை ஆசிரியை முன் போய் நின்றார்.

ஏற இறங்கப் பார்த்தார் அவ்வம்மையார். வாஷிங்கு டனைச் சேர்த்துக்கொண்டதாகவும் சொல்லவில்லை; சேர்த்துக்கொள்ள முடியாது என்றும் கூறவில்லை. இதற்கிடையில், வேறு சிலரை மாணவராக அவ்வம்மை யார் சேர்த்துக்கொண்டதைக் கண்ட வாஷிங்குடனுக்கு மனம் எப்படியிருந்திருக்கும்! "ஐயோ! சமயம் மாத் திரம் வாய்த்தால், அவர்கள் அளவு நானும் பெயர் சொல்ல மாட்டேனா?" என்று நினைத்துப் புழுங்கிய மனத்துடனே அருகே நின்றபடியே இருந்தார். அவ ரைச் சேர்த்துக்கொள்வதில் அவ்வாசிரியை காலந்தாழ்த் ததற்குக் காரணம் இல்லாமலில்லை. வாஷிங்குடன் முகத் தில் அப்பொழுது களை என்பதே இல்லை; படிக்கக் கூடியவர் என்பதே தோன்றவில்லை. இவற்றிற்கெல்லாங் காரணம் அவர் பல நாட்பசியினால் மெலிவெய்தியிருந் தமை என்றும், பன்னாள் நீராடாது இருந்தமை என்றும், அழுக்குப் பிடித்த ஆடையை உடுத்திருக்க நேர்ந்தமை என்றும் அவ்வம்மையார் அறிந்திருந் தாலன்றோ ஐயப்படமாட்டார்! இது நிற்க. அவரைச் சேர்த்துக்கொள்ளும்பொருட்டு ஒரு தேர்வு வைக்கப் பட்டது. வியப்பு என்ன என்றால், அவரை எழுதப் படிக்கச் சொல்லியோ எண்ணச் சொல்லியோ தேர்ந்தா ரல்லர்; அலகினைக் கொடுத்துப் பெருக்கச் சொன்னார் அவ்வம்மையார். அவ்வேலை அவருக்கு நன்றாய்த் தெரியுமாதலின், குதித்துக்கொண்டெழுந்தார் வாஷிங்

குடன். முன்பு அடிமையாய் இருந்த நாளில் ரப்னரிடம் (Mrs. Ruffner) அதனை அவர் நன்றாகப் பயின்றிருந்தார். அதனால், அந்நேரம் அவருக்கு நேர்ந்த மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. தமக்குத் தெரிந்த வேலையைத்தானே செய்யும்படி கட்டளை பிறந்ததெனப் பேருவகை எய்தினார் புக்கர். அறையுட்சென்றார்; பெருக்கினார் தரையை மும்முறை; பிறகு, துணியொன்றை வாங்கித் துடைத்தார் நான்கு முறை: சுவரிலிருந்த மரப்பாகங் களையெல்லாம் பன்முறை துடைத்தார்; மேசை, நாற் காலி முதலியவற்றையும் துடைத்தார். அறையிற் சுத்தமடையாத மூலை முடுக்குக்கூட இல்லை. வந்து பார்த்தார் அம்மணியார்; தரையைப் பார்த்தார்; மூலை யைப் பார்த்தார்; கையில் வெள்ளைக் குட்டையை எடுத்துக்கொண்டு சுவரிலுள்ள மரத்தைத் தடவிப் பார்த்தார். எத்தனை பார்த்தும் யாது பயன்? ஒரு சிறு புழுதியைக்கூட அவரால் கண்டுபிடிக்க முடிய வில்லை. "நீ இப்பள்ளிக்கூடத்திற் சேரலாம்," என்று மிகச் சாந்தமாகக் கூறினார். புக்கரின் மகிழ்ச்சியைக் குறித்து எழுத இயலாது.

அவர் துடைப்பத் தேர்வில் தேர்ச்சி பெற்றது அவருக்கு மிக்க நலம் பயந்தது. விரைவில் அவருக்கு அப்பள்ளிக்கூடத்திலேயே வேலையாள் நிலை கிடைத் தது. அதனால், அவர்தம் முழு உணவுக்கு வழி கிட்

டிற்று. வேலைக்குப் பதிலாகக் காசின்றி உண்டி கிடைத்தது. வேலை மாத்திரம் கடுமையானதுதான். இரவில் வெகுநேரம் விழித்திருந்து, காலையில் வெகு விரைவில் எழுந்து அவ்வேலையைப் பார்க்கவேண்டி இருந்தபோதிலும், புக்கர் தமது வறுமைக்கொடுமையால் அதனை உவகையுடன் ஏற்றுக்கொண்டார். ஹேம்புடன் பள்ளிக்கூடத்தில் ஆண்டுக்கு எழுபது டாலர் விதம் புக்கர் சம்பளங் கட்ட வேண்டியவராய் இருந்தார். அதற்கு என் செய்வார்! ஆர்ம்ஸ்டிராங்கு (Armstrong) என்ற பெரியவர், மார்கன் (Morgan) என்பாரிடம் சொல்லி அன்னாரைப் புக்கருக்காகச் சம்பளஞ் செலுத்தும்படி ஏற்பாடு செய்தார். மெய்ப்பை ஒன்றே உடைய புக்கர் அதனையே வேலை செய்யுங்காலும் படிக்குங்காலும் மற்ற நேரத்திலும் அணிந்திருக்க வேண்டியிருந்ததோடன்றி, அதில் யாதொரு மாசுமின்றித் தூய்தாக வைத்திருக்கக் கடமைப்பட்டவராயும் இருந்தார். அவர் உண்மையிலேயே படிக்க முயலும் ஓர் அரிய உழைப்பாளர் என்பதைக் கண்ட சில ஆசிரியர்கள், அவருக்குச் சில பழைய துணிமணிகளைக் கொடுப்பாராயினர். அவையெல்லாம் வடவமெரிக்காவிலுள்ள சில வேளாளரிடமிருந்து வந்தவை. அத்துணிமணிகள் இல்லையேல், நூற்றுக்கணக்கான எளிய தகுந்த மாணவர்கள் தங்கள் தங்கள் படிப்பை முற்றுவித்துக்கொண்டிருக்க முடியாது

என்பது உறுதி.

அதுவரையில், புக்கர் இரண்டு விரிப்பு உள்ள படுக்கையிற் படுத்தறியார். ஹேம்புடன் மாணவரில்லத்தில் ஒவ்வோர் அறையிலும் ஏழெட்டு மாணவர் தங்கும்படி விதிக்கப்பட்டிருந்தது. மாணவர் ஒவ்வொருவருக்கும் இரண்டு விரிப்புக்கள் கொடுக்கப்பட்டிருந்தன. புக்கர் முதல் நாள் விரிப்புக்களின் அடியிற் படுத்துக்கொண்டார்; மறு நாள் இரண்டையும் விரித்து மேலே படுத்துக்கொண்டார்; மூன்றும் நாளே மற்ற மாணவர்களை நோக்கி, ஒரு விரிப்பின்மேலே படுத்துக்கொண்டு மற்றொன்றினுற் போர்த்திக்கொள்ள வேண்டுமென்பதை அறிந்தார். ஹேம்புடன் பள்ளி வாழ்க்கையாற் புக்கர் பல செய்திகளை அறிந்துகொண்டார். நாடோறும் நீராடுவதால் உண்டாகும் நலனையும், நேரத்தில் உண்பதால் உண்டாகும் உரனையும், பல் துலக்கக் குச்சியை ஆள்வதால் உண்டாகும் விழுப்பத்தையும் உணர்ந்து கொண்டார். அப்பள்ளிக்கூடத்திற்குப் படிக்க வந்து சேர்ந்திருந்த மாணவருட்பலர் வயது முதிர்ந்தவர். நாற்பது வயதுள்ள ஆடவரும் பெண்டிரும் நானூற்றுவர்க்குமேல் இருந்தனர். அவர்களது ஆர்வத்தை என் சொல்வது! படிப்பிலாகிலும் வேலையிலாகிலும் எப்பொழுதும் அவர்கள் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களிற் பலர் உலகத்திற் பல காலம் பழகியிருந்தவர். ஆதலால்,

கல்வி இன்றியமையாதது என்பதை அவர்கள் நன்ருக அறிந்திருந்தார்கள். அவர்களுட் பலர் நரைமுதிர் யாக்கை யராய் இருந்தமையால், செவ்வனே மனப்பாடம் பண்ண மாட்டாதவராய் இருந்தனராயினும், அவரது ஆர்வம் பெருகியதற்கு மாத்திரம் அளவில்லை. பலர் புத்தகத் தோடு போராடவேண்டியிருந்ததோடன்றி, அறிவினைக் கொல்லும் நிச்ச நிரப்போடு நேர் நின்று வாகை சூட வேண்டியவராயும் இருந்தனர். கோற்கண்ணராய பெற்ருேரைப் பேண வேண்டிய சிலரும், உதவியை இன்றியமையாது வேண்டி நிற்கும் மனைவியின் உண்டிக்கு வழி பண்ண வேண்டிய சிலரும் ஈண்டு மாணவராயிருந்தனர் என்பது அறியத்தக்கது. இம் மாணவர் எல்லாருக்கும் ஓர் அரிய குறிக்கோள் இருந் தது. அஃது எதுவெனில், தத்தம் ஊரிலேயுள்ள மக்களை உயர்த்துதற்குத் தங்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே. அவர்தம்முள் தன்னையே பற்றிக் கவலைப்பட்டவன் ஒருவனும் இருந்திலன்.

ஆசிரியர்களும், அதிகாரிகளும் இராப்பகல் எல் லாம் மாணவர்களாகவே உழைத்தனர். மாணவர்க்கு யாதேனும் ஒரு வகையிலாவது உதவி புரியுங்காலே அவர்கட்கு மகிழ்ச்சியுண்டாவது வழக்கம். புத்தகங்களி லிருந்து அறிவதினும் மிக்கதாகப் பெரியாரிடமிருந்து அறியக் கூடுமென்று புக்கர் கருதினுர். ஆர்ம்ஸ்டிராங்கு

என்பவர் அப்பள்ளிக்கூடத்தேயிருந்து உழைத்து வந்த பெரியாருள் ஒருவர். அவரோடு நெருங்கி நாளும் நாளும் பழகுவதற்கு மாத்திரம் மாணவர் விடப்பட்டால், பள்ளிக்கூடம், வகுப்பு, ஆசிரியர் ஆகிய கருவிகள் வேண்டப்படுவன அல்ல என்று புக்கர் கருதினார். அப்பெரியாரின் அருங்குணங்களுள் ஒன்று சிறப்பாக அறிந்துகொள்ளத்தக்கது. அடிமைகள் விடுதலை அடைந்த நன்னாளுக்கு முன்னரெல்லாம் தென்னமெரிக்க வெள்ளையர்களோடு ஆர்ம்ஸ்டிராங்கு போர் புரிந்தாராயினும், பின்னர் ஒரு நாளும் அவ்வெள்ளையரை இகழ்ந்துரைத்தார் அல்லர். ஒருகால் எதிரியாயிருந்தவரை எக்காலும் எதிரியாகக் கருதலாகாது என்ற அவரது நோக்கம் விழுமியதன்றோ ?

ஹேம்புடன் பள்ளியில் ஓராண்டு நன்றாகப் புக்கர் கல்வி கற்ற பின், கோடை விடுமுறைக் காலம் வரவே, மாணவர் எல்லாம் தத்தம் ஊருக்குச்செல்லத் தொடங்கினர். புக்கருக்கோ, ஊருக்குப் போகக் காசில்லை. யாது செய்வார்! மற்ற மாணவர்களிடத்தில் தம் நிலையைச் சொல்லிக்கொள்ள அவருக்கு விருப்பமில்லை. தம்மிடம் இருந்த ஒரு பழைய சட்டையை விற்கத் துணிந்து முயன்றாராயினும், அம்முயற்சி பயனளிக்கவில்லை. எனவே, ஹேம்புடனை விட்டுப் புறப்படும் எண்ணமும் அற்றுப் போவதாயிற்று. ஏதேனும் வேலையொன்று

ஏற்பாடு செய்துகொண்டு கோடை விடுமுறையிற் சிறிது ஊதியம் தேட வேண்டுமென்று புக்கருக்குத் தோன்றிற்று. அதனால், பணியை நாடிப் பல இடஞ் சென்றார். முடிவில், ஓர் உண்டிச் சாலையிற் கிடைத்த தொரு வேலையால் அவருக்குச் சோறுங் காசுங் கிடைத் தன. பள்ளிக்கூடத்தை விட்டு ஆண்டின் இறுதியில் வரும்பொழுது அவர் பள்ளிக்கூடத்திற்குப் பதினறு டாலர் கடன்பட்டிருந்தார். பள்ளியிலும் வேலைக்குத் தகுந்த கூலியேயாதலாலும், ஓராண்டு முழுதும் உண வுக்கு வேண்டிய அளவு அவர் வேலை செய்ய இயலாத தாலும் அக்கடன் நின்றது. இப்பொழுது கிடைக்குங் கூலியினல் அக்கடனை அடைக்க எண்ணியிருந்தார் அவர். ஆனல், அதற்குப் போதிய அளவு கூலி கிட்ட வில்லை. எனினும், உண்டிச்சாலையில் வேலை செய்த நேரம் போக மற்ற நேரத்திலும் இரவிலுமாக அவர் பாடங்களைப் படித்துக்கொண்டார். அவர் முடிக்க வேண்டும் என்று தொடங்கிய எதனையும் முடித்து விடக்கூடும் என்ற நம்பிக்கையோடே முயல்வதுண்டு. ஆதலால், கடனை அடைக்கப் போதிய பணம் கிட்ட வில்லையே என அவர் சோர்ந்தாரல்லர். விடுமுறையின் இறுதி வாரத்திற் பள்ளிக்கூடப் பண்டாரத்தாரிடம் தமது நிலையைப் புக்கர் அறிவித்தார். அவரும், இயலுங் கால் அத்தொகையைக் கொடுக்குமாறு சொல்லி ஏற்றுக் கொண்டார்.

ஹேம்புடனில் இண்டாம் ஆண்டு தொடங்கிற்று. புக்கர் இவ்வாண்டிலும் சென்ற ஆண்டிற் செய்து வந்த வேலையைப் பெற்று, அதனைச் செய்து, உண்டிக்கு வழி பண்ணிக்கொண்டார். இப்பொழுதும் அவர் நன்ருகப் படித்தார். இப்பொழுது அவர் அங்குச் சிறப்பாகக் கண்டது யாதெனின், ஆசிரியரின் தன்னலமற்ற தன்மையேயாகும். தமக்குப் பாடு படுவதிலும் பிறர்க்குப் பாடுபடுவதால் வரும் இன்பம் பெரிது என்பதை அறிந்தார். வேத புத்தகத்தில் நல்ல பயிற்சி பெற்ருர். அப் புத்தகத்தை இலக்கியக் கண்ணுடனும் பார்க்கக் கற் பிக்கப்பட்டார். சொற்பொழிவுகள் இயற்றுதலிற் பயிற்றப்பட்டார். ஹேம்புடனில் உள்ள சொற்போர்ச் சங்கத்திற் சனிக்கிழமைதோறும் ஏதேனும் பொருள் பற்றி வாதம் நிகழும். சனிக்கிழமை ஒன்றுந் தவிராது புக்கர் அங்குச் சேர்வார். இனி, இருபது உறுப்பினர் களைச் சேர்த்துத் தனியாக மற்ருெரு சொற்போர்க் கழகத்தையும் அவர் நிறுவினர். அதன்கண் நாடோறும் இரவில் இருபது நிமிடம் வாதமாதல் பிரசங்கமாதல் நிகழும். அவற்றில் எல்லாம் அவர் கலந்துகொள்வார்.

இரண்டாம் ஆண்டு முடிந்தது. விடுமுறையும் வந்தது. இம்முறை, வாஷிங்குடனுக்கு ஊர் செல்ல இயன்றது. அவர் தாயுஞ் சகோதரர் ஜானும் இயன்ற

பணத்தை அனுப்பியிருந்தார்கள். ஆசிரியர் ஒருவரும் சிறிது உதவினர். அதனால், புக்கர் மால்டன் என்ற ஊரைச்சேர்ந்து தாயையுஞ் சகோதரர்களையுங் கண்டு அங்கே தங்க முடிந்தது. அவர் இரண்டாண்டிற் பெற்றிருந்த கல்வியைக் காணவே, அவர்களது மகிழ்ச்சி பொங்கிற்று. அவ்வூர் நீகிரோ மக்கள் அனைவரும் உவகை எய்தினர். அவர்தம் வீடுதோறும் புக்கருக்கு விருந்து நிகழ்ந்தது. அவ்விருந்துகளில், ஹேம்புடன் பள்ளியின் மேன்மையைப் புக்கர் எடுத்துரைக்க வேண்டியவராய் இருந்தார். இதற்கிடையில் பணம் தேட வேண்டுமே என்ற எண்ணம் புக்கருக்கு எழாமல் எப்படி இருக்கும்? விடுமுறை முடிந்ததும் ஹேம்புடன் சேர்வதற்கு வேண்டிய பணத்தை ஒருவரும் அவருக்குக் கொடுத்திருக்கவில்லையே! அவர் வேலையை நாடியும், விடுமுறையில் ஒருமாதம் ஆகியும் வேலை வாய்க்கவில்லை. வீட்டிற்குத் திரும்பி வந்துகொண்டிருந்த அவர், மேலே நடக்க மாட்டாதவராய், வழியில் வறிதாய் இருந்த தொரு மனையில் அயர்ந்தார். அந்நேரமோ இரவு. காலையிலோ அவருக்கு ஓர் இழவுச் செய்தி வந்தது. அவர்தம் அருமைத்தாய் அகன்றுவிட்டாள் என்ற செய்தியைச் சகோதரர் ஜான் (John) அறிவித்தார். இந்தக் கணமே அவரது வாழ்க்கையின் மிக்க துக்கக் காலமாயிருந்தது. முன்னாள் தாயை விட்டுப் பிரிந்த காலையில், மறுநாள் தம் தாயை உயிருடன் காண முடியாது

என்று நினைக்க இடம் இருந்ததில்லையே! தாய் இறக்கும் நேரத்தில் தாம் அவளுடன் இருக்கவேண்டும் என்ற புக்கரது விருப்பம் வீணாயிற்றே!! மகன் மேலோங்கி விளங்கப் போகும் நாளைக் காணாது கழிந்த னளே அந்நற்றாய்!!! இவை போன்ற எண்ணமெல் லாம் புக்கர் மனத்தில் எழாமலா இருக்கும்? தாய் சென்று சில நாள் ஆனபின் புக்கருக்குச் சில பணிகள் கிடைத்தன. ரப்னர் அம்மையிடமும் நிலக்கரிச் சுரங் கத்திலுமாக ஈரிடங்களிற் பணியாற்றி ஹேம்புடன் மீள்வதற்குப் போதிய பொருளைப் புக்கர் தேடிக் கொண்டார்.

கல்லூரி திறக்க இன்னும் மூன்று வாரங்கள் உள. இந்நிலையில், ஹேம்புடன் தலைமை ஆசிரியையிடமிருந்து புக்கருக்கு ஒரு முடங்கல் வந்தது. கல்லூரிக் கட்டடத் தைத் தூய்மைப்படுத்துவதில் உதவி செய்வதற்காகப் புக்கர் அழைக்கப்பட்டிருந்தார். அவரும் உடனே புறப்பட்டுச் சென்றார். அங்கு வேலை செய்து பெறக் கூடிய கூலியை மூன்றும் ஆண்டுக்கு முன் பணமாக வைத்துக்கொள்ள இஃது ஓர் அருமையான வாய்ப்பு அன்றோ? வேலையைச் செவ்வனே செய்தார் புக்கர். தலைமை ஆசிரியையும் தன் கையாலே சுத்தஞ்செய்து கட்டடத்தைச் செப்பஞ்செய்ததைக் கண்ட புக்கருக்கு மனம் உருகாமலிருக்குமா? அது முதல், தொழிலின்

மேன்மையைக் குறித்து அறிவுறுத்தாத எந்த நீகிரோப் பள்ளிக்கூடத்தையும், அவர் பள்ளிக்கூடமாக மதிப்ப தில்லை. இனி, அவரது ஹேம்புடன் படிப்பின் மூன்றும் ஆண்டு தொடங்கிற்று. தாம் தாளாற்றிய நேரம் ஒழிய மற்ற நேரமெல்லாம் அவர் கடும்படிப்பில் ஈடுபட்டார். சிறப்புடன் தேர்ச்சி பெற வேண்டும் என்று அவர் முயன்ற முயற்சி பெருமையைத் தந்தது. 'அருமை யுடைத்தென்று அசாவாமை வேண்டும். பெருமை முயற்சி தரும்!' என்பது பொய்யாமொழியன்றோ? 1875 ஜூன் மாதத்தில் அவரது ஹேம்புடன் கல்வி முற்றுப் பெற்றது. சிறப்போடு தேர்ச்சியடைந்து பட்டமும் பெற்றார்.

ஹேம்புடன் கல்வியால் அவருக்கு உண்டான நன்மைகளிற்சில மிகச் சிறந்தவை. அரும்பெருந் தகைமை வாய்ந்த ஆர்ம்ஸ்டிராங்கு என்ற சான்றோர் கூட்டுறவு அவருக்கு அமைந்ததும், தொழிலின் மேன் மையை அவர் ஐயமின்றி அறிந்துகொண்டதும், தனக் கென வாழாது பிறர்க்கென முயலும் பெருமையை அவர் தெளிந்துகொண்டதும் சிறந்த நலங்கள் என்க.

## 3. பட்டம் பெற்றவர்

பட்டம் பெற்ற பிறகு புக்கர் தம்மோடு கற்றோர் சிலரைப் போலவே சிற்றுண்டிச் சாலை ஒன்றில் ஏவலாள் வேலையில் அமர்ந்தார். மேசைமுன் வந்து உட்காருவோரைக் கவனிக்க வேண்டுவது அவர் கடமை. ஆனால், அந்த வேலையின் கடமைகளைச் செவ்வனே அவர் உணர்ந்தவரல்லர். ஆதலால், ஒரு மேசைமுன் உட்கார்ந்திருந்த நான்கு பொருளாளர்க்குக் கோபம் உண்டாக அவரைத் திட்டத் தொடங்கினார்கள். புக்கர் உள்ளே ஓடிவிட்டார். அதன் பயனாக ஏவலாள் பதவியை இழந்து தட்டினைத் தூக்கும் கீழாளாக நியமிக்கப்பட்டார். ஆனால், சில வாரங்களுக்குள் ஏவலாள் வேலையைக் கற்றுக்கொண்டு, அவ்வேலையை மீண்டும் பெற்றுச் செவ்வன் செய்வாராயினர். அவ்வுண்டிச் சாலையிலே பல முறை ஓர் அரிய விருந்தினராக எதிர்கொள்ளப்பட்ட பெருமை அவருக்குப் பிற்கால வாழ்க்கையில் ஏற்பட்டது.

சில மாதங்கள் கழித்துப் புக்கர் தமது ஊராகிய மால்டன் சென்று சேர்ந்தார். ஆங்கு நீகிரோப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அவ்வேலை அவருக்குக் காலையில் எட்டு மணிக்குத் தொடங்கி இரவில் பத்து மணிக்கே முடிவுறும். புத்தகங்களைக் கற்



புக்கர் தி. வாஷிங்குடன் இளமைத் தோற்றம்

பித்ததேயன்றி, வேறு சில அலுவல்களையும் பார்த்து வந்தார். தலையை எங்ஙனம் வாரிக்கொள்வதென்றும், முகத்தையும் கைகளையும் எங்ஙனம் சுத்தமாக வைத் திருப்பது என்றும், உடைகளை எங்ஙனம் தூயனவாய் வைத்திருப்பது என்றும் அவர் மாணவர்க்கு நன்ருகக் கற் பித்தார். மேலும், நீராடலின் நலத்தையும் பற்குச்சியாளு தலின் மேன்மையையும் விளக்கிக் கூறுவாராயினர்.

இப்பகற்பள்ளிக்கூடமேயன்றி, இரவுப் பள்ளிக் கூடம் ஒன்றும் அவரது முயற்சியால் நிறுவப்பட்டது. வயதான பல ஆடவரும் பெண்டிரும், பகலில் தொழில் புரிவோரும் கல்வி பெறும்பொருட்டே அப்பாடசாலை அமைக்கப்பட்டது. முதலிலிருந்தே அப்பள்ளிக் கூடத்திற் பல மாணவர் சேர்ந்து படிப்பாராயினர். அவ்விரண்டு பள்ளிக்கூடங்களிற் செய்த வேலை சாலா தென்று கருதி, புக்கர் இன்னும் சில தொண்டுகள் புரியத் தொடங்கிஞர். அத்தொண்டின் பயஞய்ச் சிறு வாசக சாலையொன்றும் சொற்போர்க் கழகம் ஒன்றும் எழுந்தன. அவர் இரண்டு இடங்களில் வாரப் பள்ளிக் கூடம் வைத்து, ஞாயிற்றுக்கிழமைதோறும் வந்த மக் கட்குப் பாடஞ்சொல்லுவாராயினர். இவையேயன்றி, ஹேம்புடன் கலாசாலைக்கு அனுப்ப எண்ணிச் சில மாணவர்களைத் தனியாகப் பயிற்றிஞர். அவருக்குப் பொது நிதியிலிருந்து சிறிதளவு சம்பளம் கிடைத்த

தாயினும், அவர் பார்த்து வந்த வேலைகளெல்லாம் அச் சம்பளத்திற்காக அல்ல. அவர்பால் கற்க விரும்பிச் சென்ற எவரும் கற்பிக்கப்பட்டார். எடுக்க எடுக்கக் குறையாத விழுச்செல்வம் அன்றோ கல்வி! அதனை வேண்டுவோர்க்கெல்லாம் உள்ளமுவந்து உதவிய வள்ளல் ஆயினர் வாஷிங்குடன். கல்வியின் அருமை பெருமைகளை அவர் அறிந்தவராதலின், அவருடன் பிறந்தாராகிய ஜான் என்பவரை ஹேம்புடனுக்கு அனுப்பிப் படிக்கவேண்டிய அளவு பொருள் உதவி செய்தார். அவரும் மூன்றாண்டில் படித்துத் திரும்பித் தமையனருக்குப் பொருந்திய வகையில் உதவி செய்வா ராயினர். பின் இவ்விருவரும் சேர்ந்து தம் தாய் வளர்த்த ஜேம்ஸ் (James) என்ற தம்பி முறையானை ஹேம்புடன் பள்ளிக்கு அனுப்பினர். கல்வியாலாய பயனை உணர்ந்த புக்கர் தம் சகோதரர் இருவரும் அக்கல்வியை அடைய உதவியது எத்துணைச் சிறந்தது!

இரண்டு ஆண்டுகள் மால்டனில் ஆசிரியராய் இருந்து தம் உடன் பிறந்தாரைப் படிக்க அனுப்பி யதேயன்றி, வேறு பல ஆண் பெண்களையும் பயிற்றி ஹேம்புடனுக்கு அனுப்பினர். 1878-ஆம் ஆண்டில் வாஷிங்குடன் என்ற ஊருக்குப்போய் ஆங்குத் தாம் பயில வேண்டுமென்று நினைத்தார். அவ்வண்ணமே ஆண்டுச் சென்று எட்டு மாதம் படித்தார். படிக்குங்

கால், அக்கல்லூரிக்கும் ஹேம்புடன் கலாசாலைக்கும் உள்ள வேற்றுமையைக் கண்டார். ஹேம்புடனிலோ, மாணவர் எல்லாம் உண்டி, நூல்கள், துணி, இருப்பிடம், இவற்றிற்கான பணத்தை வேலை செய்து தேடிக் கொண்டே படிக்க வேண்டியிருந்தபடியால், தன்னம்பிக்கையுடையவராய் இருந்தார்கள். ஆனால், வாஷிங்குடன் என்னும் ஊரின் கல்லூரியில் வாசித்த மாணவருட்பெரும்பாலார் பெரிய இடத்துப் பிள்ளைகள் போலக் காணப்பட்டனர். அவர்தம் செலவுக்கெல்லாம் அவருடைய உழைப்பு இன்றியே பணங் கிடைத்து வந்தது. அவர்கள் பள்ளியை விட்டுச் சென்ற நாளில் கிரீக்கு இலத்தின் மொழிகளைச் சற்று நன்றாகப் படித்திருந்தார்கள் என்று கூறலாமே தவிர, வாழ்க்கை நிலையையோ, வாழ்க்கை முறையையோ அவர்கள் அறிந்திருந்தார்கள் என்று கூறுவதற்கில்லை. படிப்பு முடிந்ததும் நாட்டுப்புறத்துக்குப் போய்த் தம் இனத்தாரை உயர்த்த வேண்டும் என்ற எண்ணமே அவர்களுக்கு எழாமல், உண்டிச்சாலை ஏவலாளராகவும், மூட்டை தூக்குவோராகவும் வாழ்நாள் முழுதும் நகரத்திற் கழிக்கவே அவர்களுக்கு விருப்பம் இருந்தது. அவர்களெல்லாம் கிராமங்களுக்குப் போய் இயற்கையன்னையின் உதவியால் வாழாது ஒழிகின்றார்களே, உழுதூண் சுவையை விரும்பாது தொழுதூண் சுவையை விரும்பிக் கெடுகிறார்களே என்று புக்கர் பல வேளை நினைத்ததுண்டு.

வாஷிங்குடனிலிருந்து புக்கர் வாஷிங்குடன் மீண்டதும் சார்லெஸ்டன் (Charleston) என்ற ஊரிலுள்ள வெள்ளையர் குழுவினர் அவருக்கு ஒரு விண்ணப்பஞ் செய்துகொண்டனர்; சார்லெஸ்டன் என்ற ஊரே மேல வர்ஜீனியாப் பகுதியின் தலைநகராக மாற்றப்பட வேண்டும் என்பதற்கு வேண்டிய ஆதாரங்களைக் காட்டிப்பேசுமாறு புக்கரை வேண்டிற்று அவ்விண்ணப்பம். அவ்வூரும் மால்டனிலிருந்து ஐந்து கல் தூரத்தில் இருந்தது. அவர் இசைந்து நாடெங்கும் சுற்றிப் பல இடங்களிற் சொற்பொழிவு ஆற்றினர். சார்லெஸ்டனைத் தலைநகராகச் செய்வதா, அன்றி வேறு இரண்டு ஊர்களில் ஒன்றைத் தலைநகராகச் செய்வதா என்பது கேள்வி. முடிவில், சார்லெஸ்டனே வெற்றி பெற்றது. புக்கர் பல ஊர்களிற் பேசிய திறத்தைக் கண்டு மெச்சிய பலர், அவரை அரசியல் வாழ்க்கையிற் புகுமாறு பன்முறை வேண்டிக்கொண்டனர். ஆனால், அவர் அதற்கு இசைந்தாரல்லர். அவருடைய நோக்கமெல்லாம் தம் இனத்தாரை உயர்த்த வேண்டும் என்பதே. ஆகலின், தாம் மாத்திரம் வெற்றிபெற்று மிளிரக்கூடிய ஒரு வாழ்க்கையில் தம் நலங்கருதி ஈடுபட அவர் இசையவில்லை. அரசியல் வாழ்க்கையில் தாம் வெற்றி அடையக்கூடும் என்பது அவரும் உணர்ந்ததே எனினும், தமது இனத்தாருக்குச் செய்ய வேண்டிய கடமையை நினைத்துப்

பெறற்கரிய அந்த வெற்றியையும் அவர் விரும்பினாரில்லை. அவரது இனத்தாருக்கு அக்காலத்தில் அடிப்படையான கல்வியும், கைத்தொழிலும், சொத்துரிமையும், இன்றியமையாச் சிறப்பினவாய் வேண்டப்பட்டன. இவற்றிற்காகப் பாடு படுவதே அங்கிலையில் தக்கது எனக் கருதித் தம் நலம் விடுத்துப் பொது நலம் நாடத் தொடங்கினார் புக்கர்.

இங்ஙனம் நிகழும் வேளையில், புக்கருக்கு உவகையும் வியப்பும் அளிக்கும் ஒரு கடிதம் கிடைத்தது. அது ஆர்ம்ஸ்டிராங்கு அவர்களிடமிருந்து வந்தது. ஹேம்புடனுக்கு வந்து அவ்வாண்டின் பட்டதாரிகளுக்கு நல்லுரை பகர வேண்டும் என்று அம்முடங்கல் முழங்கிற்று. ஆறு ஆண்டுகளுக்குமுன் துடைப்பத் தேர்வில் தேர்ச்சியடைந்த பின் சேர்த்துக்கொள்ளப் பட்ட அக்கல்லூரியிலேதான் இப்பொழுது புக்கர் இத் தகைய சிறப்பினையடைவது என்றால் வியப்பில்லாமல் இருப்பதன்றோ வியப்பாகும் ! 'வெற்றி பெறுகிற ஆற்றல்' என்னும் பொருள் பற்றிச் சிறந்ததொரு விரிவுரையினைப் புக்கர் எழுதிக்கொண்டார். ஹேம்புடனுக்கு இம்முறை செல்லுங்கால் முழுவதும் புகை வண்டியிலே செல்ல அவருக்கு இயன்றது. பழைய பள்ளிக்கூடத்தில் அவரைச் சிறப்போடு வரவேற்றார்கள். அவர் ஆங்குச் செய்த சொற்பொழிவை எல்லோரும் போற்றி

ஞர்கள். ஊருக்குத் திரும்பிய பின் புக்கருக்கு ஆர்ம்ஸ்டிராங்கினிடமிருந்து இன்றொரு முடங்கல் வந்தது. புக்கர் உடனே புறப்பட்டு ஹேம்புடனுக்கு வந்து, அவ்விடத்தில் ஆசிரியராய் இருந்துகொண்டு மேலும் படிக்கலாம் என்பது அக்கடிதத்தில் வரைந்திருந்தது. புக்கரோ, தமது ஊரில் பள்ளிக்கூடம் ஏற்படுத்திப் பல மாணவர்களைப் பழக்கிக்கொண்டிருந்தார் என்பது முன்னரே கூறப்பட்டது. அவர் உடன் பிறந்தார் இருவரையும் வேறு சிறந்த மாணவர் நால்வரையும் பொறுக்கியெடுத்துப் பயிற்றி ஹேம்புடனுக்கு முன்னரே அனுப்பியுள்ளார் ஆதலின், அவர்தம் திறமை ஆண்டு நன்றாக வெளிப்பட்டிருக்க வேண்டும். இஃது அவரை ஆசிரியராக ஆங்கு அழைக்க ஒரு காரணமாய் இருந்திருக்கக்கூடும். தமது பள்ளிக்கூடத்தின் முன்னேற்றத்திற் புக்கர் பெரிதும் ஈடுபட்டிருந்தாராயினும், ஆசான் கட்டளையை மீற மனமில்லாதவராய், அப்பள்ளிக்கூடத்திலிருந்து அரிதிற்பிரிந்து ஹேம்புடன் சேர்ந்தார்.

ஹேம்புடனில் அப்பொழுது ஆர்ம்ஸ்டிராங்கு சிவப்பிந்தியர் சிலரை நாகரிக வழியிற்பயிற்ற முற்பட்டிருந்தார். பொதுவாக, அக்காலத்திற் சிவப்பிந்தியருக்குக் கல்வி பயின்று பயனடையக் கூடிய ஆற்றல் இருந்ததாக எவரும் நம்புவது இல்லை. ஆர்ம்ஸ்டிராங்கோ, முயன்று பார்க்க உறுதி செய்துகொண்டார். அதற்

கெனவே புக்கர் அழைக்கப்பட்டார். எழுபத்தைந்து சிவப்பிந்தியர் அவரது பார்வையில் வைக்கப்பட்டனர். அவர் அவ்விந்தியருடைய ஆடை, இருப்பிடம், பயிற்சி முதலானவற்றை ஆய்ந்து வருவாரானார். எழுபத்தைந்து இந்தியர்கள் நடுவில் அவர் ஒருவரே நீகிரோவராய் இருந்தும், அவர்கள் நம்பிக்கையையும், நன்மதிப்பையும் சிறிது சிறிதாகப் புக்கர் பெறுவாரானார். வெள்ளையரினும் தாம் உயர்ந்தவர் என்று நினைத்தவர்கள் சிவப்பிந்தியர்கள். அடிமை நாட்களில், பல நீகிரோவர் சிவப்பிந்தியர் சிலரிடம் அடிமையாய் இருந்துள்ளனர். அங்ஙனம் இருக்க, நீகிரோவரைவிடத் தாம் மிக உயர்ந்தவர் என்ற எண்ணம் இல்லாமல் இருந்தார்கள் என்று கூறுவதற்கில்லை. அதனால் தான் அவருடைய மதிப்பைப் பெறுவது எளிதன்று. புக்கரோ, அவர்களுக்குப் பல கலைகளையும் தொழில்களையும் வெற்றியுடன் கற்பித்தார். இப்படி ஓராண்டு கழிந்தது.

அதற்குள்ளாக, ஆர்ம்ஸ்டிராங்கு ஓர் இரவுப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தத் துணிந்தார். பகற்பள்ளியிற் சேர்ந்து படிக்கப் போதுமான காசு பணமில்லாது பல இளைஞர், கல்வி பெற வழியில்லையே என ஏங்கி நின்றதை அவர் அறிந்தார். ஆதலால், அவர்க்கென இராப் பள்ளி அமைக்கவே இப்பொழுது முடிவு செய்தார். அதைப் போற்றிடப் புக்கரைப் பணிக்க, அவரும் இணங்-

கினார். அதுவே டஸ்கிகீயிற் பின்னாளிற் புக்கராற் செய்யப்படவிருக்கும் பெரிய தொண்டிற்கு வழிகாட்டியாயிற்று. அப்பள்ளியின் மாணவர்களெல்லாம் பகலிற் பத்துமணி நேரம் கைத்தொழில் செய்ய வேண்டும் என்றும், இரவில் இரண்டு மணி நேரம் நூல் கற்பிக்கப்படுவர் என்றும் ஏற்படாயிற்று. அவர்களுடைய வேலைக்குக் கூலியாக உண்டிச் செலவுக்கு மேல் சிறிதளவு பணம் கொடுப்பதாகவும் ஏற்பாடாயிற்று. அந்தக் காசைப் பள்ளிக்கூடப் பண்டாரத்தில் வைத்திருந்தார்கள். தேர்ச்சியுற்றதும், பகற்பள்ளிக்கூடத்திற் சேருங்கால் உண்டிக்காக உதவும்பொருட்டே அது சேமித்து வைக்கப்பட்டது. முதற்கண் அப்பள்ளியிற் பன்னிருவரைச் சேர்த்தனர். சில வாரத்தில் இருபத்தைந்து பேர் படிக்கலாயினர். அவர்களெல்லாம் ஊக்கத்துடன் உழைத்துப் படித்து அவரவர் வாழ்க்கையிற் பின்னாளிற் சிறந்த மக்களானார்கள்.

1880-ஆம் ஆண்டில் பன்னிரு மாணவரே இருந்த அவ்விராப் பள்ளிக்கூடம் வளர்ந்து வளர்ந்து 1900-ஆம் ஆண்டில் ஏறத்தாழ முந்நூற்றைம்பது மாணவரைப் பெற்றுப் பயனளிப்பதாயிற்று. அப்பள்ளிக்கூடத்தின் ஆசிரியராக ஓராண்டு புக்கர் வாஷிங்குடன் அமர்ந்து, திறம்பட அடிப்படை கோலினார். இனி அவரது வாழ்க்கையின் அரிய தொண்டினை நோக்குவோம்.

## 4. வாழ்க்கையின் அரிய தொண்டு

இராப் பள்ளிக்கூடத்து மாணவர்களையும் சிவப் பிந்தியச் சிறுவர்களையும் புக்கர் கவனித்து வருகின்ற நாளில் ஒரு நாள் ஆர்ம்ஸ்டிராங்கு அவரைப் பிறிதொரு வேலையை ஒப்புக்கொள்ள முடியுமா எனக் கேட்டார். அலபாமா (Alabama) என்ற மண்டலத்தில் டஸ்கிகீ என்ற ஊரின்கண் நீகிரோவர்க்காக ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்த அரசாங்கத்தார் ஆண்டு ஒன்றுக்கு இரண்டாயிரம் டாலர் அளிக்க ஒப்புக்கொண்டிருந்தார்கள். அவ்வூரார் சிலர் ஆர்ம்ஸ்டிராங்குக்கு எழுதித் தங்களுக்குத் தகுந்த ஒரு வெள்ளையரை ஆசிரியராகும்பொருட்டுத் தெரிவிக்குமாறு கேட்டிருந்தார்கள். அவர்களது எண்ணம் நீகிரோவருள் அத்தகையார் ஒருவர் அகப்படுவது அரிது என்பதேயாம். ஆர்ம்ஸ்டிராங்கு தக்க வெள்ளையர் ஒருவரை அறிந்திலர். ஆதலின், அவர் புக்கர் பெயரையும் பெருமையையும் குறிப்பிட்டு, அவரை அழைத்துக்கொள்ள விருப்பமா என அவ்வூராரைக் கேட்டார். அவர்களும் இணங்கித் தந்தி சொன்னார்கள்.

புக்கர் சின்னாளில் ஆண்டுப் போய்ச் சேர்ந்ததும் ஓர் ஏமாற்றம் அடைந்தார். பள்ளிக்கூடக் கட்டடம் ஒன்று இருக்குமென்றும், போனவுடன் பாடசாலையைத் தொடங்க வேண்டுமென்றும் நினைத்துச் சென்ற

அவருக்கு ஏன் ஏமாற்றம் வாராது இருக்கும்? அங்குக் கட்டடம் ஒன்றும் இல்லை; ஆனால், ஆர்வமும் கல்விப் பசியும் உடைய மக்கள் பலர் இருந்ததைக் கண்டார். சட்டசபையால் அளிக்கப்பட்டிருந்த பொருள், ஆசிரியர்கள் சம்பளத்திற்காகச் செலவிடப்படலாமே அன்றி, அதிலிருந்து கட்டடத்திற்காகக் காசு ஒன்றும் செலவிடப்படக்கூடாது. சூழ்ந்து சுற்றிப் பார்த்துப் புக்கர் ஓரிடத்தைப் பள்ளிச்சாலைக்கெனக் கண்டு பிடித்தார். அது பழைய மாதாகோவிலின் அருகே இருந்து இடிந்து விழுந்த சந்தைக்கூடம். மாதா கோவிற் கட்டடமும் இடிந்து போகும் நிலையில் இருந்தது. 1881 ஜூன் மாதத்தில் அவ்வூரில் வந்து சேர்ந்த அவருக்கு அக்கட்டடம் கண்டுபிடிப்பதற்கும், அலபாமா மண்டலம் முழுதுஞ் சுற்றிப் பள்ளிக்கூடத்தைப் பற்றி விளம்பரப் படுத்துவதற்கும் ஒரு மாதம் ஆயிற்று. பிறகு ஜூலை 4-ஆந்தேதி பள்ளிக்கூடம் தொடங்கப்பட்டது. அப் பள்ளிக்கூடத்தால் நீகிரோவர் கல்வி பெற்ற பின், தத்தம் நிலங்களை விட்டுவிட்டுப் புதிய நடையுடைகளை உடையவராய்த் தங்களுக்குப் பயனின்றிப் போவாரே என வெள்ளையர் பலர் வருந்தினர். வேறு விதமாக நீகிரோவர் திருந்தக்கூடும் என்று நினைக்க அவர்களால் இயலவில்லை. ஆனால், புக்கர் ஊரூராய்ச் சுற்றிப் பார்த்து, மக்களின் மிக்க எளிமை வாய்ந்த நிலையைத் தெளிவாக அறிந்தனராகலின், அப்பள்ளிக்கூடத்தில்

புத்தகப் படிப்பு ஒன்றே கொடுக்க மனங்கொண்டா ரல்லர். மாணவரெல்லாரும் எப்படிக் குளிப்பதென்றும், எப்படிப் பல்லையும் உடையையும் சுத்தப்படுத்துவ தென்றும், எதை எப்படிச் சாப்பிடுவதென்றும், எப்படி அறைகளைத் தூயனவாக வைத்திருப்பதென்றுங் கற்பிக் கப்பட்டார்கள்; ஏதேனும் ஒரு கைத்தொழிலும் கற்பிக்கப்பட்டார்கள்; உழைப்புணர்ச்சியும் செட் டுணர்ச்சியும் கொளுத்தப்பட்டார்கள்; பள்ளியை விட்டுச் சென்றதும் வாழ்க்கைக்கு வேண்டிய வழியைத் தேடிக்கொள்ளக் கற்பிக்கப்பட்டார்கள். இவற்றிலெல் லாம் புக்கருக்கு எதிர்பாராத அருமை உதவியாளர் ஒருவர் அமைந்தார். ஒலிவியா டேவிட்சன் (Miss Olivia Davidson) என்னும் அப்பெண்மணி விரும்பத் தக்க குணங்கள் எல்லாம் வாய்க்கப் பெற்றவர். அவர் ஓகியோப் பட்டணத்தே பிறந்து கல்வி பயின்ற பின்ன ரும், ஹேம்புடன் பெருமையைச் செவியுற்று ஆங்குஞ் சென்று பட்டம் பெற்றவர்; அதற்கு முன்னரே ஆசிரி யத்தொழிலைச் செவ்வனே செய்தவர். தம் மாணவர் அம்மை நோய், தொத்துக்காய்ச்சல் முதலியவற்றால் துன்புற்ற காலையிற் சலிப்பின்றி உடனிருந்து பேணி, வேண்டிய செய்த பெருந்தகையார் அவர். அன்னார் இப்பொழுது டஸ்கிகிப் பள்ளிக்கூடத்தில் ஓர் ஆசிரிய ராய் வந்து சேர்ந்து புக்கருக்குப் பேருதவி செய்வாரானார்.

முதலில், டஸ்கிகியில் முப்பது மாணவரே சேர்ந்திருந்தனர். வாரந்தோறும் எண் பெருக, ஒரு மாதத்திற்குள் ஐம்பது ஆயிற்று. பதினைந்து வயதுக்கு மேற்பட்டவரும், சிறிதேனும் முன்னரே கல்வி பெற்றிருந்தவருமே இப்பள்ளியிற் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். நாற்பத்தைந்து வயதுள்ள பெரியாரும் மாணவராயினர். ஆசிரியர் சிலரும் மாணவராய் வந்து சேர்ந்தனர். இவர்களிற்பலர் கைத்தொழில் செய்யாது வாழ்நாளை இன்பமாகக் கழிக்கும் நோக்கத்துடன் வந்தவர். அவரெல்லாம் புக்கர் கொடுக்க நினைத்திருந்த கல்வியின் பெற்றியை அறிந்திலர் போலும்!

அதனாற்றான், புக்கர் தோட்டத்திற் சற்று நேரம் வேலை செய்யுமாறு கூறிய பொழுது அவர்கள் தயங்கினர். புக்கரோ. அரும்பாடு பட்டுப் பழைய தோட்டம் ஒன்றை விலைக்கு வாங்கியிருந்தார். அது பெரிய தோட்டமாயினும், அழிவிலைக்குக் கிடைத்தது. ஐந்நூறு டாலர் அதற்குச் சொற்ப விலையேயாயினும், அப்பணத்துக்குத்தானும் புக்கர் எங்குப் போவார்? இருநூற்றைம்பது டாலர் ஹேம்ப்டன் பண்டாரத்தாரது சொந்தப் பணத்திலிருந்து கடன் வாங்கிக்கொண்டு உடனே செலுத்தினார். மற்ற இருநூற்றைம்பது டாலரை ஓராண்டுத் தவணையிற் கொடுப்பதாகச் சொல்லித் தோட்டத்தை வாங்கிவிட்டார். தோட்டத்தில் இருந்த

குதிரை நிலையமுங் கோழியறையும் பாடஞ்சொல்லிக் கொடுத்தற்குப் பயன்பட்டன. பள்ளிக்கூடமே அத் தோட்டத்திற்கு மாற்றப்பட்டது. அறைகளை எல் லாஞ் சுத்தம் செய்த பிறகு புக்கர் தோட்டத்தைக் கொத்தி ஏதேனும் பயிர் செய்ய எண்ணினர். அவ் வெண்ணத்தை மாணவர் அறிந்த பின், அவருட்பலரது முகத்தைப் பார்க்க வேண்டுமே! 'இதற்குத்தானு இங்கு வந்தோம்!' என்று நினைத்தார் சிலர். 'கல்விக்கும் கலப் பைக்கும் ஏது தொடர்பு?' எனக் கேட்டார் சிலர். முன் னரே ஆசிரியராய் இருந்த தாம் தமது மேன்மையை இங்ஙனம் போக்கிக்கொள்வதா என வினவினர் சிலர். புக்கர் மாலைதோறும் மண்வெட்டியைக் கையில் எடுத் துக்கொண்டு தோட்டத்துட்புகுவார். மாணவர்கள் தங்கள் ஆசிரியர் வேலை செய்தற்கு அஞ்சவும் இல்லை; வெட்கப்படவும் இல்லை என்பதைக் கண்டவுடனே, ஒருமித்து ஆர்வத்துடன் வந்து உழைப்பாராயினர். இரு பது ஏக்கரா நிலம் இப்பொழுது பண்படுத்தப்பட்டுப் பயிரையும் தாங்கி நிற்பதாயிற்று.

இதற்கிடையே, ஒலிவியா அம்மையார் கடனை அடைக்கப் பெரிதும் முயன்று பணஞ்சேர்க்கத் தொடங்கினர். அவர் டஸ்கிகியில் வீடுதோறுஞ் சென்று பள்ளிக்கூடத்திற்காகக் கிடைத்ததைப் பெற் ருர். பண்ணியாரம், கோழிக்குஞ்சு, ரொட்டி, குருவி முத,

லானவை அவருக்குக் கிடைக்கும். அவற்றையெல்லாம் குறிப்பிட்டதொரு நாளிலே பெற்று ஒரு விழாக் கொண்டாடுவார். அவ்விழாவில் அவை விற்கப்படும். இங்ஙனம் நடத்தப்பட்ட பல விழாக்களின் பயனாய்ச் சிறிது ஆக்கம் உண்டாயிற்று. மேலும், சிலரைப் பணங்காசு கொடுக்கும்படியுங் கேட்டு வந்தார். வெள்ளையரும் சிறிது சிறிது கொடுத்துதவினர். நீகிரோ வருட்பலர், ஆயுள் நாள் முழுதும் அடிமைகளாய் இருந்தவர், இப்பொழுது தத்தம்மால் இயன்றதைக் கொடுக்கப் பேரார்வத்துடன் முன் வந்தனர். ஒரு நாள் நீகிரோ ஔவை ஒருத்தி தட்டித் தடுமாறிக்கொண்டு புக்கரது அறைப் புறத்தே முட்டிக்கொண்டு வந்து நின்றாள்; நின்று, "நான் என் வாழ்நாளை அடிமையிற் கழித்தேன் என்பது கடவுளுக்குத் தெரியும். நீங்களும் ஒலிவியா அம்மையும் நம்மவரைச் சிறந்த ஆண் பெண் களாக்க முயலுகிறீர்கள் என்பதை அறிவேன். என்னிடத்திலோ, பணம் இல்லை. என் சேமிப்பு எல்லாம் இந்த ஆறு முட்டைகளே. இவற்றை இம்மாணவரின் கல்வியின்பொருட்டு எடுத்துக்கொள்ளுமாறு உங்களை வேண்டுகிறேன்," என்று சொல்லி முட்டைகளை அளித்தாள். இதைப் போன்று ஆர்வத்துடன் அளிக்கப்பட்ட சிறு சிறு பொருளெல்லாம் வந்து சேரவே, மூன்று மாத காலத்தில் இருநூற்றைம்பது டாலர் ஆயின. வாங்கியிருந்த கடனை உடனே திருப்பிக் கொடுத்தார் புக்கர்.

இன்னும் இரண்டு மாதங்களில் இன்னும் இருநூற்றைம்பது டாலர் சேரவே, தோட்டத்திற்காகத் தவணை சொல்லியிருந்த பணமும் கொடுக்கப்பட்டது. நூறு ஏக்கராப் பரப்பு உள்ள அத்தோட்டம், இப்பொழுது பள்ளியின் உடைமை ஆயிற்று.

அடுத்தபடியாக, உழவுத் தொழில் நன்முகக் கவனிக்கப்படலாயிற்று. மாணவருட்பலர் உழவுப் பகுதிகளிலிருந்து வந்தவர்கள் ஆதலின், அவர்கள் ஊர் திரும்பியதும் புது முறையில் உழுது பயிரிட்டுச் சாகுபடி செய்யக்கூடுமென்று புக்கர் நம்பினார்; மற்ற மாணவர்க்கும் விவசாயம் சொல்லி வைப்பது நல்லதென்றே கருதினார். அதன் பின்னர்க் கைத்தொழிலிலும் மாணவர்களைப் பழக்கினார்.

பள்ளிக்கூடமோ, நாளுக்குநாள் பெருகிக்கொண்டு வருகிறது. இடமோ, போதிய அளவு இல்லை. நெடு நேரம் சூழ்ந்து, புக்கரும் பிறரும் ஒரு கட்டடத்திற்குத் திட்டம் போட்டுவிட்டார்கள். கட்டடம் ஆக அறுநூறு டாலர் செல்லும். திட்டம் போட்டிருக்குஞ் செய்தியைக் கேட்டவுடனே வெள்ளையர் ஒருவர் புக்கரிடம் வந்து, தாம் அக்கட்டடத்திற்கு வேண்டிய மரச்சாமான்களை உடனே தோட்ட நிலத்திற் கொண்டு வந்து சேர்ப்பதாகவும், கிடைத்தவுடன்

பணம் தருவதாகப் புக்கர் வாக்களித்தல் போதும் என்பதாகவுங் கூறினர். புக்கரின் வியப்பிற்கும் மகிழ்ச்சிக்கும் எல்லையில்லை. சிறிது பொருள் புக்கருக்குக் கிடைத்தவுடனே அவ்வெள்ளையர் மரங்களைக்கொண்டு வந்து சேர்ப்பதற்குப் புக்கர் இணங்கினர்.

ஒலிவியா அம்மையார் டஸ்கிகியிலும் அதைச் சுற்றிலுமாகப் போய்ச் சிறிது சிறிதாகக் கட்டடத்திற்குப் பொருள் தேடுவாராயினர். பிறகு, வடக்கே சென்று ஆங்கு உள்ள மக்களுக்கு இப்பள்ளிக் கூடத்தை விளம்பரப்படுத்தி வந்தார். பல மாதா கோவில்களிலும் பள்ளிக்கூடங்களிலும் தம் கலாசாலையைப்பற்றிப் பேசினர். வடக்கேயிருந்து பலர் உதவி செய்ய முற்பட்டார்கள். முதன்முதலாக ஒரு பெண்மணி ஐம்பது டாலருக்கு உண்டியல் கொடுத்தார். இன்னுஞ்சிலரும் இயன்றதை உதவினர்கள்.

முதற்கட்டடமாகப் போர்ட்டர் மண்டபம் (Porter Hall) என்பது தொடங்கப்பட்டது. அக்கட்டடத்திற்கு வேண்டிய பணத்திற் பெரும் பகுதி போர்ட்டர் என்பவரால் அளிக்கப்பட்டது. அதனைக் கட்டிக்கொண்டிருக்கும் பொழுது ஒரு நாள் பணமுடை பெரியதாயிற்று. அந்நாளில் நானூறு டாலர் கடனைத் திருப்பிக்கொடுப்பதாக முன்னரே ஒருவருக்கு

வாக்களிக்கப்பட்டிருக்கிறது. காலையில் ஒரு டாலர்கூட புக்கர் கையில் இல்லை. ஆனால், அற்றைநாள் அஞ்சலில் நானூறு டாலருக்கு ஓர் உண்டியல் வந்தது. ஒலிவியா அம்மையார் பாஸ்டன் (Boston) பெண்மணிகள் இருவரிடமிருந்து அத்தொகையை வாங்கி அனுப்பியுள்ளார். அவ்விரண்டு பெண்மணிகளும் தங்கள் பெயரைத் தெரிவிக்காமலே பின்னரும் முடை ஏற்பட்ட காலத்திலெல்லாம் டஸ்கிகீப் பள்ளிக்கூடத்திற்குப் பேருதவி செய்து வந்தார்கள். முட்டுப்பாடுற்று வாடிய போதெல்லாம் வாட்டத்தைப் போக்கிய அவ்வள்ளியாரைப் போற்றாது யாரே இருப்பர்? அவர்கள் பதினான்கு ஆண்டு வரை ஆண்டுதோறும் ஆறாயிரம் டாலர் அனுப்பினார்களென்றால், அவர்களது வண்மையை என்னென்பது!

கட்டடத்தின் அடிப்படைக்காக மாணவர்களால் நிலம் தோண்டப்பட்டது. மாலையில் மாணவரெல்லாம் அங்கு வேலை செய்யச் சில வாரத்தில் அடிப்படை போட்டாயிற்று. மூலைக்கல் நடவேண்டிய நாள் வந்தது. பல மக்கள் ஒன்று கூடி அந்நாளைக் கொண்டாடித் தத்தமக்கு இயன்றதைக் கொடுக்க முன் வந்தனர். வெள்ளையரும், நீகிரோவரும், ஆசிரியரும், மாணவரும், பெற்றோரும், மக்களும் வந்து நிற்ப, மூலைக்கல் ந[illegible]தை நினைக்கும் பொழுது,

அதற்குப் பதினறு ஆண்டுகட்கு முன்னல் நீகிரோ வர்க்குக் கல்வி சொல்லிக்கொடுக்கும் எவனும் தண்டிக்கப்பட்டிருப்பன் என்பதை நினைத்துப் பார்த்தால், உலகில் இவ்வளவு பெரிய மாறுதல் இத்துணையளவு விரைவில் ஏற்பட்ட நாடுகள் தவச்சில என்பது தோன்றும்.

கட்டடம் முடிவதற்குள் புக்கர் முதலியோர் எவ்வளவு துயரமுற்றனர் என்பது நாமெல்லாம் எளிதில் அறிதல் முடியாது. பல வேளைகளிற் கடன் பத்திரங்களைத் தீர்க்க வேண்டிய நாட்களில் அவற்றிற்கு வேண்டிய பணம் கையில் இல்லாமலும், இனிக் கட்டட வேலையை எப்படி நடத்துவது என்று அறியாமலும், ஒவ்வோர் இரவும் தூக்கமின்றிப் படுக்கையிற் புரண்டு புரண்டு புக்கர் துயரமுற்ருர் என்று அறிகிரும். மேலும், செய்யத் தொடங்கிய அச்செயலை முற்றுறச் செய்யின், நீகிரோ வகுப்பாருடைய மேன்மை புலப்படும்; செய்யாவிடின், அவ்வருக்கத்தார் எல்லாம் அவமதிக்கப்படுவரே என்ற எண்ணம் வேறு, புக்கரை வருத்தி வந்தது. புக்கர் சலியாது பலரிடம் சென்று சிறு சிறு கடன் வாங்கிப் பெருங்கடனை அடைத்த வேளைகள் பல. ஆனல், ஒன்றை நன்ருக அவர் மேற்கொண்டதனலேயே வெற்றி பெற்ருர். 'நாணயமென்பது முதல் என்பதாக நினை,' என அவர்

அறிவுறுத்தப்பட்டிருந்தவாறே, நாணயம் தவருது குறித்த பணத்தைக் குறித்த காலத்தே கொடுத்து வந்தார். ஆர்ம்ஸ்டிராங்கு என்பவர் தாம் நெடுநாள் சேர்த்து வைத்திருந்த பொருளனைத்தையும் ஒரு நாள் புக்கருக்குத் தந்துதவினார். அதுவும் கட்டடத்திற்குப் பயன்பட்டது.

இதனிடையே 1882-ஆம் ஆண்டில், பேனி ஸ்மித்து (Miss Fannie Smith) என்ற பெண்ணைப் புக்கர் மணந்துகொண்டார். அவரது இல்லம் மற்றை நான்கு ஆசிரியருக்கும் தங்க இடம் தருவதாயிற்று. அவர் மணந்த பெண்ணும் ஹேம்புடன் கலாசாலையிற் பட்டம் பெற்றவள் : ஆனதால், புக்கருக்குப் பல வழிகளில் உதவி புரிந்தாள். போர்ஷியா வாஷிங்டன் (Portia M. Washington) என்ற ஒரு பெண் மகவையும் தன் கணவரையும் விட்டு, 1884ல் அவர் விண்ணோர்க்கு விருந்தாயினர். புக்கருக்கு இது துயர் தாராது இருந்திருக்குமோ ?

கட்டட வேலை செய்து வருங்கால், புக்கருக்குச் சில கடுஞ்சோதனைகள் வந்தன. அவர் கட்டடத்திற்கு வேண்டிய செங்கல்லிற்காகச் சூளை போட உறுதி கொண்டார். சூளை வேலை எளியதொன்றன்று. மட்குழியிற் பல மணி நேரம் முழங்கால் வரை மண்ணோடு

நிற்பதன் அருமைக்கு அஞ்சி, மாணவருட்பலர் அவ் வேலையை வெறுத்தனர் ; சிலர் பள்ளியை விட்டுச் சென்றனர். செங்கல்லிற்குரிய மண் தோன்றும் இடத் திற்காகப் பற்பல இடங்கள் நாடப்பட்டன. கடு வேலை செய்து இருபத்தையாயிரம் கற்களை அறுத்து அடைத்து நெருப்பு மூட்டினர்கள். சூளையைச் சுடு வதிற் பழக்கம் அவர்களுக்கு இல்லையாதலால், பயன் பெற்றாரல்லர். இரண்டாம் முறையும் சூளை பயன் தந்திலது. மூன்றும் முறை வைக்கப்பட்டது, ஐந்தாறு நாள் எரிந்து திடீரென்று கீழே விழுந்தது. இம்முறை ஆயிரக்கணக்கான கல் கிடைப்பதில் ஐயமில்லை என நம்பியிருந்த அவர்களெல்லாம் ஏமாற்றமடைந்தனர். இனி, கையிற்காசில்லை. மாணவரோ, வேலை செய்ய விரும்புகிறரில்லை. புக்கரோ, எடுத்த வேலையை முடித்துவிடுவது என்று உறுதி செய்துகொண்டுவிட் டார். தம்மிடம் ஒரு கைக்கடிகாரம் இருந்தது அவர் நினைவிற்கு வந்தது. அதை அடகு வைத்துப் பதினைந்து டாலர் வாங்கி வந்து ஆசிரியர் சிலருந் தாமும் முயன்று நான்காம் முறையாகக் காளவாய் போட்டார். இம் முறை வெற்றியே. இதன்பின் எத்துணையோ காள வாய்கள் போடப்பட்டன. அவையெல்லாம் வெற்றியே. அலபாமா மண்டலம் முழுதுமே அப்பள்ளிக்கூடச் சூளைகளின் கற்களை விரும்பி வாங்கும் காலம் சில ஆண்

டிற்குள் வந்துவிட்டது. "முயற்சி திருவினையாக்கும்," என்பது எந்நாட்டிற்கும் ஏற்ற உண்மையன்றோ?

இங்ஙனம் கற்கள் அமைத்து விற்று வந்ததால் நீகிரோவர்க்கும், வாங்க வந்த வெள்ளையர்க்கும் நட்பு ஏற்படத் தொடங்கிற்று. நீகிரோவர் படிப்பினால் உதவியற்றவராவர் என்ற எண்ணம் போய், தமக்கெல்லாம் பேருதவியாளராய் உள்ளார் என்ற எண்ணம் எழலாயிற்று.

இன்னும் சில கைத்தொழில்களும் தொடங்கப்பட்டன. கலாசாலைக்கு வேண்டிய சவாரி வண்டிகள், பாரவண்டிகளெல்லாம் அங்கே செய்யப்பட்டன. சில நாளில், விலைக்கு விற்கும்பொருட்டுப் பற்பல வண்டிகள் உண்டாக்கப்பட்டன. பக்கத்திலிருந்த மக்கள் வாங்கிக்கொண்டு, கலாசாலை பயனளிப்பதைக் கண்கூடாகக் காணலுற்றார்கள்.

கைத்தொழில் செய்ய விருப்பமில்லாத மாணவர் பலர் பெற்றோர்க்கு முறையிட, அவரெல்லாம் புக்கருக்கு எழுதிக் கூக்குரல் எழுப்பினர். புக்கரோ, கைத்தொழிலின் சிறப்பை நன்குணர்ந்தவர். அதில் ஊதியமன்றி அழகும் பெருமையும் இருப்பதாகவே அவர் கூறி வந்தார். பழைய முறையிலே கைத்தொழிலைப் புரியுமாறு அவர் கூறினாரல்லர். காற்று, நீர், நீராவி,

மின்சாரம் முதலானவற்றைக் கைத்தொழிலிற் பயன் படுத்திக்கொள்ளுமாறு கற்பித்தார். இதை அறியா மக்கள் சிலர் எதிர்த்தாராக, அவர் ஊர் ஊராகச் சென்று கைத்தொழிற்கல்வியின் சிறப்பை எடுத்து இயம்பி வருவாராயினர்; மாணவர்க்கும் பன்முறை பரிந்து கூறுவாராயினர்; பத்தொன்பது ஆண்டுகட்குள் நாற்பது கட்டடங்கள் டஸ்கிகிக் கலாசாலைக்கெனக் கட்டப்பட்டவற்றுள் நான்கு நீங்கலாக ஏனையவெல் லாம் மாணவர்தம் உழைப்பால் எழுப்பப்பட்டன என்பதையும், ஆங்கு இப்பொழுது ஒரு கட்டடம் வேண்டுமாஞல், பிறருதவியின்றித் திட்டம் போடுவது முதல், கட்டி முடித்து மின்சாரக் கருவிகள் வைப்பது வரை ஆங்காங்குள்ள ஆசிரியர்களாலும் மாணவர்க ளாலுமே நிறைவேற்றக் கூடும் என்பதையும் அறிவோ மாயின், அக்கலாசாலையின் மாண்பை அறிந்தோம் ஆவோம்.

1882-ஆம் ஆண்டில், புக்கரும் ஒலிவியா அம்மை யும் வடக்கே சுற்றிப் புதுக் கட்டடத்திற்காகப் பொரு ளுதவி தேடுவாராயினர். போர்ட்டர் மண்டபத்தைக் கட்டி முடித்ததும், ராபர்ட்டு பெட்போர்டு (Rev. Robert Bedford) என்ற சான்ருேர் ஒருவரை அழைத் துச் சொற்பொழிவாற்றும்படி புக்கர் செய்தார். பின் னர், வாரன் லோகன் (Warren Logan) என்பவர்


ஒருவர் ஹேம்புடனிலிருந்து வந்து புக்கருக்குப் பேருதவி செய்வாராயினர். அவர் கலாசாலைப் பண்டாரத்தார் பதவியைத் தாங்கி வந்ததேயன்றி, புக்கர் ஊரிலில்லாத வேளைகளில் அவருக்காகத் தலைவர் வேலையைப் பார்த்து வருவாராயினர்.

கலாசாலையின் இரண்டாம் ஆண்டு முடிவிற்குள் முற்கூறிய கட்டடம் அமைக்கப்பட்டுவிட்டது. இனி, உண்டி நிலையம் ஒன்று அமைக்க எண்ணினர் புக்கர். வெளியூரிலிருந்து வந்திருந்த மாணவர் பலரையும் அன்னார் பசியையுந் தவிர, அதனை அமைக்க வேறொன்றுங் கண்டிலர். ஆனால், கட்டடத்தின் கீழே தோட்டால், ஓர் அடித்தள அறை தோன்றுமென்பது தோற்றிற்று. அதனை மாணவர் தொட்டனர். இப்பொழுது அது சமையலுக்கும் சாப்பாட்டிற்கும் உரிய அறையாக உதவிற்று. வணிகருட் சிலர் அந்நிலையத்திற்கு வேண்டிய சாப்பாட்டுப் பொருள்களைக் கடனாகக் கொடுக்க முன் வந்தார்கள். எனவே, உண்டி விடுதி தலையெடுத்தது. ஆனால், உண்டி முதற்கண் நன்றாய் இல்லை. காலத்திற் படைக்க வேண்டும் என்ற எண்ணமே மடையர்க்கு இல்லை. இரண்டு வாரம் வரையில் ஒன்று நன்றாயிருந்தால், மற்றொன்று கெட்டிருக்கும் என்றவாறு இருந்தது. குடிக்கும் நீர் பற்றிக் குழப்பமும், காபிக் குவளையைக் குறித்துக் கலாமும் பற்பல அந்நாளில் நிகழ்ந்தன.

ஆயினும், பொறுமையாலும் உலைவிலா உழைப்பாலும் மெல்ல மெல்லக் குழப்பம் அகன்று அமைதி நிலவிற்று. இன்று டஸ்கிகீக்குச் சென்று பார்த்தால், அங்கு உண்டி நிலையம் மிக்க அமைதியுடன் திகழக் காணலாம். சாப்பாட்டு அறை நல்ல காற்றோட்டம் உடையதாயும், ஒளி பெறுவதாயும், பெரியதாயுங் காணப்படும். அழகிய அரிய உண்டிகள் நம்மை அழைப்பன போலிருக்கும். மேசைகளும் மேசை விரிப்புக்களும் பூச்செடிகளும் உண்டு. உணவுப்பொருள்களெல்லாம் நேரந் தவறாது படைக்கப்படுவதைக் காணலாம். முதலில் துன்பங்கள் தந்தவை முடிவில் இன்பங்கள் பயக்கும் என்ற உண்மையை அறியாதோர்க்கும் அறிவுறுத்தி நிற்கிறது அவ்வுண்டி நிலையம்.

சில நாட்கள் கழித்து, அக்கல்லூரியைக் காணப் பெரியார் சிலர் வந்தனர். முன் இருநூற்றைம்பது டாலர் கடன் கொடுத்துதவிய மார்ஷல் என்பவரும், முன் புக்கரைத் துடைப்பத் தேர்வால் தேர்ந்தெடுத்த மேரி மேக்கி (Miss Mary F. Mackie) அம்மையும், புக்கரை டஸ்கிகீக்கு அனுப்பிய ஆர்ம்ஸ்டிராங்கு என்பாரும் ஒருவர் பின் ஒருவராக வந்து பார்த்துப் போயினர். அவர்களெல்லாம் அக்கல்லூரி காலம்பெற அமைந்திருந்த முன்னேற்றத்தைக் கண்டு வியந்து மகிழ்வாராயினர்.

ஆனால், புக்கருக்கு இன்னும் வருத்தம் இருந்தே வந்தது. மாணவர்க்கு உண்டிச்சாலை அமைக்கப்பட்டு விட்டதேயொழிய, அவரெல்லாம் உறங்குதற்கு வேண்டிய நலங்கள் இயற்றப் பெறவில்லை. மாணவர்கள் மாதந்தோறும் எட்டு டாலர் உண்டிக்கெனக் கொடுக்கக் கடமைப்பட்டவர்கள். அதைத் தவிர அறைக்கென்றும், குளிர் காய விறகுக்கென்றும், வண்ணானுக்கென்றும், வேறு வரிகள் இல்லை. எட்டு டாலரிற் பெரும்பகுதியை அவரவர் கலாசாலையிற் செய்யும் வேலைக்கு ஏற்றாற்போல வரவு வைக்கப் பெறுவர். இஃதன்றி, பொருளுடைய மாணவரிடத்திலிருந்து ஆண்டிற்கு ஐம்பது டாலர் வீதம் கல்வி வரி வாங்கப்பட்டே வந்தது. ஆனால், இச்சிறு தொகைகளைக்கொண்டு உண்டிச் சாலையைத்தானும் நடத்துவது இயலாதிருந்தது. படுக்கை நலமின்றிப் பல மாணவர்கள் குளிரால் தவித்தனர். போர்த்திக் கொள்ளப் போதிய சால்வைகளை அளிக்க முடியவில்லை என்றால், படுப்பதற்குப் பலகைகளும் மெத்தைகளும் அளிப்பது யாங்ஙனம்? புக்கர் குளிர் மலிந்த இரவு பலவற்றுள் தம் மாணவரின் துயரத்துக்கு இரங்கி உறக்கங் காணாது இருந்தனர். சில வேளைகளில், நள்ளிரவிற் புக்கர் எழுந்து மாணவர் விடுதியை அடைந்து, அவருக்கெல்லாம் ஆறுதல் சொல்லி



தஸ்கிகேச் சர்வகலாசாலை ஆகாயத்தோற்றம்

வருவார். பிறகு, மெல்ல மெல்லப் போர்வைகளும் மெத்தைகளும் பலகைகளும் அமைக்கப்பட்டுக் கொடுக்கப்பட்டன. தொடக்கத்தில், தச்சு வேலை தெரிந்த மாணவர் சிலரே இருந்தனர். அவராற்செய்யப்பட்ட மஞ்சங்கள் சில நாளில் ஒடிந்துபோய்க் கிடந்த காட்சியைப் புக்கரே கண்டிருக்கிறார். ஆனால், விடாது முயன்று நாளடைவில் நல்ல மஞ்சங்கள் செய்யப்பட்டன. அடியிற்போடும் மெத்தைகளும் அங்கே தைக்கப்பட்டன. முதலில் முக்காலிகளும், பின்னர் நாற்காலிகளும் செய்யப்பட்டன. இங்ஙனம் செய்யப்பட்ட மரச்சாமான்கள் மாணவர் நலத்திற்கு ஆயின. பின்னர் ஊருக்கும் அவை உதவப்பட்டன.

டஸ்கிகீயின் பெருமையை என்னென்பது! அடுத்து முயன்றால் ஆகாதனவும் ஆகும் என்று காட்டி நிற்கும் நிலையங்களுள் தலை சிறந்தது அது. ஆங்குக் கற்கும் மாணவர் புறத்தூய்மை நீரானும், அகத் தூய்மை வாய்மையானும் அமையப் பெறுகின்றனர். 'உலகம் வறுமையை மன்னிக்கும் அன்றி, அழுக்கை மன்னிக்காது,' என்ற நல்லுரையைப் பெறுகின்றனர். நேரிய முறையில் உண்ணவும் உறங்கவும் அறிகின்றனர். துணிகளை மாசின்றி அணிய அறிந்துகொள்கின்றனர். அவர் புனைந்திருக்கும் எச்சட்டையிலுங் கிழிந்த இடம் இராது; பொத்தான் போயிருக்காது.

இவையெல்லாம் அக்கலாசாலையின் முதற்படிப்பு, பின்னர், நூற்கல்வியும் தொழிற்கல்வியும் பெறுகின்றனர்.

இவ்வளவுக்கும் காரணமாயிருந்து புக்கர் வாஷிங்குடன் செய்து வந்த தொண்டு அருமையானதன்றோ !

## 5. இன்னும் அத்தொண்டே

போர்ட்டர் மண்டபம் கட்டி முடிந்ததும், சில மாணவியருக்கு அதன் மாடத்தின்கண்ணே இருக்க இடம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. ஆனால், நாளுக்கு நாள் மாணவியர் பலர் பலராய் வருவாராயினர். மாணவர்களும் மேன்மேல் வரவே, மாணவர்கள் உண்ண இடமும், மாணவியர் தங்க இடமும் இன்னும் பெரியனவாக வேண்டியிருந்தன. பெரிய கட்டடத்திற்குத் திட்டம் போட்டுவிட்டார் புக்கர். கையிற் காசில்லை. கட்டடத்திற்கு 'அலபாமா ஹால்' என்ற பெயர் வேறு இட்டுவிட்டார் இங்கிலையில். பிள்ளை பெறுமுன் பெயர் இட்டாய்விட்டது! அலபாமா மண்டலத்தே அத்தொண்டு செய்யப்படுவதால், அப் பெயரால் அம்மண்டலத்தைப் பெருமைப்படுத்த எண்ணினார் புக்கர். தொடக்கத்திலிருந்தே மாணவரிடமும் ஊராரிடமும் புக்கர் சொல்லி வந்தனவெல்லாம், கலாசாலை தம்முடையதென்றே வேறு சிலருடையதென்றே எண்ணக்கூடாதென்பதும், மாணவர் எல்லார்க்கும் ஊரார் எல்லார்க்கும் அதில் உரிமையுண்டென்பதும் ஆம். ஆதலின், அப்பெயர் பொருத்தம் ஆனதே.

மாணவர்கள் முன் போலவே அடித்தளக் கல்லிற்

காக இடம் பறிக்கலாயினர். ,டஸ்கிகீயிலும் அதன் சுற்றிலுமாகப் போய் ஒலிவியா அம்மையார் மீண்டும் உதவியைப் பெற்று வருவாராயினர். கிடைக்கக் கூடிய உதவியெல்லாம் கிடைத்துவிட்ட பிற்பாடும் போதிய அளவு பொருள் சேரவில்லை, திட்டம் போட்டிருப்பது பதினாயிரம் டாலருக்கு அன்றோ? இதனைக் கேள்வியுற்ற பெரியார் ஆர்ம்ஸ்டிராங்கு புக்கரைக் கூடுமானால் உடனே ஹேம்புடனுக்கு வருமாறும், வந்து தம்முடன் வடக்கே ஒரு மாதம் சுற்றுமாறும் எழுதியிருந்தார். அவரது நோக்கம் வடதேசத்தாருக்குப் புக்கரை அறிமுகப்படுத்தி வைப்பதாகும். புக்கருஞ்சென்றார். வடதேசத்தே இருவரும் நாடோறுஞ்சென்று ஆங்காங்கே டஸ்கிகீக் கலாசாலையை விளம்பரப்படுத்திப் பேசியதால் வந்த வந்த ஆதரவைப் பெறுவாராயினர். புக்கருக்கு யாதொரு செலவும் இல்லை. செலவெல்லாம் ஹேம்புடனைச் சேர்ந்தது. வருவாயனைத்தும் டஸ்கிகீயைச் சேர்ந்தது. இந்த ஏற்பாட்டைச் செய்தவர் விரிந்து பரந்த நோக்கத்தை உடைய விழுமியார் ஆர்ம்ஸ்டிராங்கே ஆவர். இவ்வூரென்றும் அவ்வூரென்றும் எழும் வேற்றுமை அவர்பால் இல்லை. அவ்விரு ஊரிலும் ஒரு வர்க்கத்தாரின்பொருட்டே இத்துணை உழைப்பும் எடுத்துக்கொள்ளப்படுகிறது என்ற ஒற்றுமை உணர்ச்சியே அவரிடம் குடிகொண்டிருந்தது.

நியூ யார்க்கு (New York), புருக்லின் (Brooklyn), பாஸ்டன் (Boston), பிலடெல்பியா (Philadelphia) முதலான ஊர்களில் இருவருமாகச் சுற்றி ஆதரவு தேடினர். பின்னர், சில இடங்களுக்குப் புக்கர் தனியே சென்று முயல்வாராயினர். அம்முயற்சிகளில் அவர் எங்ஙனம் வெற்றி பெற்றார் எனப் பலர் அவரைக் கேட்டறிய விரும்பியதுண்டு. அன்னார்க்கு அவர் உரைத்த இரகசியம் இரண்டே. தனிப்பட்ட ஆட்களிடமும் சங்கங்களிலும் தாம் டஸ்கிகியில் செய்து வரும் வேலையை முற்றுறத் தெரிவித்தது ஒன்று: பயனைக் குறித்துக் கவலைப்படாது மீண்டும் தமது வேலையைச் செவ்வனே செய்து வந்தது மற்றொன்று. ஒரு செயலில் ஒருவர் வெற்றியுற வேண்டுமானால், தம்மை மறந்து அக் கருமமே கண்ணாய் இருத்தல் வேண்டுமென்று புக்கர் சொல்லி வந்ததோடு செயலிலுங் காட்டி வந்தார்.

'பொருள் நிரம்பக் கொடுத்திலரே!' எனப் பொருளுடையாரைத் திட்டுபவரிடம் அவருக்கு நல்ல எண்ணம் இல்லை. பணக்காரரிடஞ் சென்று பார்த்தாலன்றோ, அவருக்குள்ள பல கடமைகளையும் அவர் பிறரறியாது செய்யும் பல கொடைகளையும் அறிந்துகொள்ளக் கூடுமென்றும், கேட்ட யாவர்க்குங் கொடுப்பது என்பது செல்வர் எல்லாருக்கும் இயலாது என்றும் அவருணர்ந்ததைச் சில நண்பர்களுக்குக் கூறியுள்ளார்.

புக்கர் செல்வரிடஞ் சென்று இரந்தார் அல்லர். அவர்மாட்டுச் சென்று டஸ்கிகியிற் செய்யப்படுந் தொண்டினை எடுத்துக்கூறி அவர் உதவ ஒரு வாய்ப்புத் தந்து வந்தாரேயன்றி, 'ஈயின்' என இரந்தாரல்லர். வீடு தோறுஞ்சென்று அவர் நாடிய வகையில், மக்களுட் சிறந்தார் சிலரைக் காண அவருக்குச் சமயம் வாய்த்தது. பாஸ்டனில், அவர் செல்வர் ஒருவரைக்கண்டு பேசினர். அவர் தமது கடமையைப் புக்கரே செய்வதற்கான நன்றி கூறி, மனமுவந்து மானியம் அளித்தார். அதற்கு முன்னல், புக்கராற்பார்க்கப்பட்ட சீமாட்டியின் கணவனர் சீறி விழுந்து நாய்போலக் குரைத்து அனுப்பினர். உலகம் இவ்விரு திறத்தாரையும் உடைத்து. எனினும், அமெரிக்காவில் முன்னவர் போன்றவர் தொகை நிரம்பிக்கொண்டும் பின்னவர் போன்றவர் தொகை குறைந்துகொண்டும் வருவதாகவே சொல்லப்படுகின்றது.

ஒருவரிடஞ்சென்றக்கால் ஒன்று கொடாவிடில், அவரை இகழலாகாது என்று கருதியவர் புக்கர். அவரே பல வேளைகளில் முதற்கண் ஒன்றுங் கொடுக்காதவரிடமிருந்தும் சிறிதளவே கொடுத்தவரிடமிருந்தும் பின்னல் பெருநிதிகள் பெற்றிருக்கிறர். முதலில் ஒரு காசுங் கொடுக்காத செல்வர் ஒருவர், டஸ்கிகித் தொண்டினை அறிந்துகொள்ள அது முதல் முயல்வாரா

கிப் பின்னர்ப் பதினாயிரம் டாலர் கொடுத்தார். அப் பணம் டஸ்கிகிக் கலாசாலை தத்தளித்துக்கொண் டிருந்த நேரத்தில் வந்து உதவிற்று. ஹண்டிங்குடன் (Collis P. Huntington) என்ற பெரியார் ஒருவர், முதற் கண் இரண்டு டாலரே கொடுத்தவர், பின்னர் ஐம்பதினா யிரம் டாலருக்கு மேலுங் கொடுத்து உதவினார்.

இதைப்போன்று பலவாறு பணம் வந்து சேர்ந்தது கலாசாலையின் நல்வேளையால் என்று நினைப்பது தவறு என்றும், அழுக்கற்றுச் செய்து வந்த அரிய தொண்டி னாற்றான் என்று நம்புவதே தகுதியென்றும் புக்கர் பன் முறை கூறி வந்ததுண்டு.

டஸ்கிகியில், இடிந்து கிடந்த சந்தைக் கூடத்தில் மழை பெய்யுங்கால் மாணவனொருவன் குடை பிடிக்க, புக்கர் கற்பித்து வந்த காலம் போய், அழகான கட்ட டத்தில் ஆசிரியர் பலர் அமைதியுடன் கற்பிக்குங் காலம் வந்துவிட்டது. உண்ணுங்கால், மழைத்துளி மேலே விழாவண்ணம் குடை பிடிக்கப்பட்ட காலம் ஒழிந்து, சிறந்த உண்டி நிலையம் நிறுவப்பட்டுவிட்டது. சொற் பொழிவு ஆற்ற வந்திருந்த டொனல்டு (Dr. Donald) என்ற பெரியார், மழையில் நனைந்துகொண்டே பேச வேண்டியிருந்த காலங்கழிந்து, பல்லாயிர டாலர் செல வில் இரண்டு பெண்மணிகள் உதவியாற் கட்டப்

பட்ட வழிபாட்டு நிலையம், திகழும் காலம் வந்து விட்டது. கலாசாலைப் புத்தகங்களை வைக்க இடமின்றி இன்னலுற்ற காலம் அகன்று, இருபதினாயிரம் டாலர் செலவில் கார்னிஜி (Mr. Andrew Carnegie) என்ற செல்வரது உதவியூற்றுக்கட்டப்பட்ட பெரும்புத்தக நிலையம் ஒன்று திகழும் காலம் வந்துவிட்டது.

இவையனைத்திற்கும் புக்கர் செய்து வந்த தொண்டே காரணம். நிதி குறைந்தவர் நல்கிய காசுகள் எல்லாம் பொற்குவை ஆயின. மாதா கோவில்களிலிருந்தும், ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிகளிலிருந்தும், கிறிஸ்தவ சங்கங்களிலிருந்தும் கிடைத்த செப்புக் காசுகளும் நிக்கற்காசுகளுஞ் சேர்ந்து, பெரிய பெரிய குவியல் ஆயின.

அலபாமா மண்டலம் முதலிற் கொடுத்து வந்த இரண்டாயிரம் டாலரை மூவாயிரமாக்கிப் பின்னரும் பெருக்கிற்று. ஜான் சிலேட்டர் (Slater) நிதியிலிருந்தும், பீபாடி (Peabody) நிதியிலிருந்தும் ஆயிரம், ஐந்நூறு என டாலர்கள் வரத்தொடங்கிப் பின்னும் பல்கின. இவையெல்லாம் டஸ்கிகீக் கலாசாலையின் முன்னேற்றத்திற்கே செலவிடப்பட்டன.

1884-ஆம் ஆண்டில், அதாவது டஸ்கிகீக் கலா

சாலை தொடங்கி மூன்று ஆண்டுகள் ஆனவுடன், ஓர் இராப்பள்ளிக்கூடம் அமைக்க வேண்டியது இன்றி யமையாதது எனத் தோற்றிற்று. பல பெண்டிரும் ஆடவரும் பள்ளிக்குத் தகுதியுடையவராய் இருந்தும், காசு பணமில்லாது கலங்கித் தவித்தவராய்க் கல்வி கற்கத் தமக்குள்ள ஆர்வத்தை வெளியிட்டு விண்ணப் பஞ் செய்தார்கள். புக்கர் முதலானவர்கள் சூழ்ந் தெண்ணி, அவர்களுக்கென ஓர் இராப்பள்ளிக்கூடம் அமைத்தார்கள். ஹேம்புடனிற்போலவே இங்கும் பகலிற் பத்து மணி நேரம் மாணவர் கைத்தொழில் செய்து மாலையில் இரண்டு மணி நேரம் புத்தகப் படிப் புப் பெற்றனர். ஆடவர் கற்சூளையிலும், பெண்டிர் சலவை நிலையத்திலும் வேலை செய்ய வேண்டியவராய் இருந்தனர். இருந்தும், இரண்டு மணி படிப்பதையே அவர் பொருளாகக் கருதினர். அவரது வேலையின் கூலி சேமிக்கப்பட்டு, அவர்கள் இரண்டோர் ஆண்டில் பகற்பள்ளியிற் சேர்வதற்கென ஒதுக்கி வைக்கப்பட்டு வந்தது. அவரெல்லாம் பின்னர்ப் பகற்பள்ளியிற் சேர்ந்து சிறந்த முறையில் தேறினார்கள். அம்மாண வரும் மற்றவரைப் போலவே சமயக் கல்வியும் பெறு வாராயினர்.

இத்துணை அரிய தொண்டினை ஆற்றி வந்த புக்கர் வாஷிங்குடன், முதல் மனைவியை மணந்து இரண்டு

ஆண்டில் இழந்தார் என்பது முன்னரே உரைக்கப்பட்டது. பின் 1885-ஆம் ஆண்டில் ஒலிவியா அம்மையாரை அவர் மணந்துகொண்டார். அவ்வம்மையாருந் தமது நேரத்தையும் வலிமையையும் பள்ளிக்கூடத்திற்கும் வீட்டிற்குமாகப் பகிர்ந்துகொண்டு வேண்டிய தொண்டாற்றி, இரண்டு மக்களைப் பெற்றபின், 1889ல் விண்ணுலகு அடைந்தார். பின்னரும், புக்கர் தமது வாழ்க்கையின் உயரிய தொண்டினையே தளராது ஆற்றி வருவாராயினர்.

## 6. சொல் வன்மை

புக்கர் வாஷிங்குடன் மேல் வர்ஜீனியா சம்ஸ்தானத்தின் தலைநகராகச் சார்லெஸ்டன் என்னும் ஊரே கொள்ளப்பட வேண்டும் எனப் பல்லிடங்களிற் பேசிய பொழுதே அவரைப் பலர் அரசியற்றுறையில் இறங்குமாறு கேட்டதற்குக் காரணம், அவரது சொல் வன்மையே. பின்னர், ஆர்ம்ஸ்டிராங்கு என்பாரோடு வடதேசத்தே சுற்றுப் பிரயாணம் செய்த காலத்திற் பற்பல இடங்களில் அவரது சொல் வன்மை வெளிப்பட்டது. ஆர்ம்ஸ்டிராங்கு அவருக்கு ஓர் அறிவுரை பகர்ந்திருந்தார். பொது மக்களுக்குச் செய்யும் சொற்பொழிவுகளில் சொல் ஒவ்வொன்றிற்குங் கருத்து ஒவ்வொன்று இருக்க வேண்டும் என்பது அது. அவ்வறிவுரையைப் புக்கர் பின்பற்றினர். வடதேசத்துக் கூட்டங்களில் ஒன்றினுக்கு வந்திருந்த பெரியார் ஒருவர் புக்கரைக் 'கல்விச் சபையின் ஆதரவிற் பேசுமாறு மேடிசன் (Madison) என்ற ஊருக்கு அழைத்தார்.

புக்கரும் அவ்வழைப்பிற்கு இணங்கி, மேடிசன் என்ற ஊரிற் பேசும்பொருட்டுச் சென்றார். ஏறக்குறைய நாலாயிரம் மக்கள் கேட்க வந்திருந்தார்கள். அவருள் அலபாமாவிலிருந்தும் டஸ்கிகியிலிருந்தும் வந்தவர் சிலருங் காணப்பட்டனர். வெள்ளையர் பலர்

வந்திருந்தனர். தென்றிசை வெள்ளையர்கள் ஆங்கு வந்திருந்ததன் காரணம், புக்கர் அவர்களை எங்ஙனம் இழித்துரைப்பார் எனக் காண்பதற்கேயாகும். ஆனால், புக்கரா வசைப்புராணம் பாடுபவர்! குற்றங்காணிற் குற்றஞ் செய்தோர் முன்னிலையில் எடுத்துக் காட்டித் திருத்த முயல்வரேயன்றித் தெற்கே செய்யப்பட்ட பழந்தீமைகளைப்பற்றி வடக்கே சென்று தூற்ருர். ஆதலின், புக்கர் ஆங்குச் சொன்னதெல்லாம், வெள்ளையரும் நீகிரோவரும் ஒத்து வாழ வேண்டுமென்பதும், அதற்குரிய வழிகளில் இரு சாராரும் முயலவேண்டுமென்பதும் ஆம். நீகிரோவர் தமது திறமையாலும் அறிவாலும் குணத்தாலும் அவ்வினத்தாருக்கு இன்றியமையாதவர் என்பதைக் காட்டுவதைப் பொறுத்தே அவரது முன்னேற்றம் நிகழும் என்று கூறி, அவர்களைப் பிறர்க்குப் பயன்படும் பொருள்கள் இயற்றுமாறு வேண்டினுர். பிறரினும் நன்ருக ஒன்றைச் செய்ய அறிந்தவன், எக்குடிப் பிறந்தாளுயினும், எவ்வூரில் தோன்றினுனுயினும், மேன்மையுறுவது ஒருதலை எனப் புக்கர் கூறி முடித்தார்.

மேடிசனிற் புக்கர் புரிந்த விரிவுரை அவருக்குப் பேரும் புகழுந் தருவதாயிற்று. அது முதல் பல அழைப்புக்கள் அவருக்கு வந்தன. அவர் தென்றிசை வெள்ளையர் முன்னிலையிற் பேச ஒரு வாய்ப்பு அமைதல் நல்

லது என்று எண்ணியிருந்த நிலையில், 1863-ஆம் ஆண்டில் அட்லாண்டா (Atlanta) என்ற ஊரிற் கிறிஸ்தவத் தொண்டரது மாபெருங்கூட்டமொன்றில் அவரைப் பேசுமாறு அழைத்தார்கள். அவர் பேச்சு ஐந்து நிமிட நேரத்தில் முடிக்கப்பட வேண்டும் என்றுஞ் சொல்லப் பட்டது. டஸ்கிகீயில் தாம் செய்து வரும் வேலையைக் குறித்துக் கூறுவதற்கும், இரு திறத்தாரும் ஒற்றுமையாய் இருக்க வேண்டியதன் காரணத்தை அறிவுறுத்துதற்குமாகவாவது போக வேண்டும் என்ற எண்ணம் புக்கருக்கு உண்டாயிற்று. ஆனால், அவ்வமயம் பாஸ்டனில் அவருக்கு வேலை இருந்தது. இரண்டாயிரம் மைல் தூரஞ்சென்று அட்லாண்டாவை அடைந்து அரைமணி நேரத்துக்குள்ளாக, ஐந்து நிமிடச் சொற்பொழிவை முடித்துக்கொண்டு, பின்னர் ஒரு மணி நேரத்தில் மீண்டும் பிரயாணத்தை மேற்கொண்டு பாஸ்டன் வந்து சேர வேண்டிய நிலையில் அவர் இருந்தார். எனினும், தாழாது அவ்வூர்ச்சென்று சொற்பொழிவை ஆற்றினர். தெற்கும் வடக்குமிருந்து வந்து கூடியிருந்த இரண்டாயிர வெள்ளையர்களும் அச்சொற்பொழிவைப் போற்றினர்கள். அட்லாண்டாத் தேசத்துச் செய்தித் தாள்களும் அதனைப் பாராட்டின.

1895-ஆம் ஆண்டில், புக்கருக்கு மற்றோர் அழைப்பு வந்தது. அஃது அட்லாண்டா எல்லையில்

6

வாழ்ந்த குடிகளுட்சிறந்தாரிடமிருந்து வந்தது. அதன்படி, புக்கர் இருபத்தைந்து பேர் கொண்ட வாரியம் ஒன்றனுள் இடம் பெற்றுக் 'காங்கிரஸ்' முன் சென்று முறையிட வேண்டியவராய் இருந்தார். அவ் வாரியத்துட் புக்கரைச் சேர்த்து மூவரே நீகிரோவர் இருந்தனர். அவரெல்லாரும் போய்க் காங்கிரஸ்முன் உரைக்க வேண்டியதை உரைத்தார்கள். புக்கரும் பதினைந்து நிமிடம் பேசினார். அட்லாண்டா வாரியமும் காங்கிரஸ் வாரியமும் புக்கரைப் போற்றின. அவர் சென்ற தூது வெற்றியுற்றது.

அத்தூதின் பயனாய் அட்லாண்டாவின்கண் பெரியதோர் பொருட்காட்சி அமைக்கப்பட்டது. அதில், நீகிரோவர்களும் வெள்ளையர்களும் செய்த சிறந்த பொருள்களெல்லாம் வைக்கப்பட்டிருந்தன. டஸ்கிகி, ஹேம்புடன் கலாசாலைகளிலிருந்து வந்திருந்த பொருள்கள் பெரிதும் போற்றப்பட்டன. அக்காட்சியை ஒட்டி நடந்த நிகழ்ச்சிகளில் ஒன்றாக, நீகிரோவருள் ஒருவர் ஒரு நாள் திறப்புச் சொற்பொழிவு ஆற்ற வேண்டும் என்பது முடிவு செய்யப்பட்டிருந்தது. அந்தப் பணி புக்கரது ஆயிற்று. தேசியச் செய்திகளைப் பற்றிப் பேசும் மேடைகளில், தென்னாட்டு வெள்ளையர் பேசும் மேடையின்பாலே நீகிரோவர் ஒருவரும் பேசுமாறு அழைக்கப்பட்டது அதுவே முதன்முறையாகும்.

அங்குக் கேட்க வருவோருட் பெரும்பாலார் கல்விப் பொருளும் செல்வப் பொருளும் நிரம்பிய தென் வெள்ளை யர் ஆவர் என்பதைப் புக்கர் உணர்ந்திருந்தார். அவர் தம்முள், சிலர் அவரை முன்னாளில் அடிமை கொண் டிருந்த ஆண்டாராகவும் இருந்திருத்தல் கூடும்.

புக்கர் செய்ய வேண்டிய பிரசங்கத்தை ஆழ்ந்து சிந்தித்து எழுதித் தம் மனைவியார்க்குக் காட்டினார். அவர் கேட்டு அவ்வாறே பேசலாம் என இசைந்தார். அட் லாண்டா செல்வதற்கு முதல் நாள் புக்கர் அச்சொற் பொழிவுக் குறிப்பை டஸ்கிகீ ஆசிரியர்களுக்குப் படித்துக் காட்டினார். அவர்களும் அதனைப் போற்றி னார்கள். பொருட்காட்சியின் நோக்கத்தை அறவே யொழித்து வெற்றியின்றிப் போகுமாறு ஒருவர் அந் நிலையில் பேசிவிடவுங் கூடும். ஆனால், புக்கர் இரு நிறத்தாரும் ஒத்து வாழ வேண்டிய முறைகளுக்குத் தடை நிகழா வண்ணம் தமது விரிவுரையை அமைத் துக்கொண்டார்.

1895 செப்டெம்பர் மாதம் 18-ஆந் தேதிதான் அச் சொற்பொழிவு ஆற்ற வேண்டிய நாள். புக்கர் டஸ்கிகீ யிலிருந்து 17-ஆம் தேதி புறப்பட்டார். உடனே மனைவியாரும், மக்கள் மூவருஞ் சென்றனர். புக்கர் புகை வண்டியிற் போய்க்கொண்டிருக்கும் பொழுது பல

புகை வண்டி நிலையங்களில் மக்கள் பற்பலர் அவரை வந்து பார்த்துச் சுட்டிக் காட்டிப் பேசிக்கொண்டார்கள். அட்லாண்டா சேர்ந்ததும் அறிஞர் பலர் வந்து அவரை வரவேற்று நின்றனர்.

அட்லாண்டாச் சபையின்கண் மக்கள் நிரம்பியிருந்தார்கள். அன்று, பேசும் பொறுப்பு எளியதொன்றன்று. பல பத்திரிகைகள் புக்கர் யாது சொல்வார் என எதிர்பார்த்துக் கூறத்தொடங்கின. எங்குப் பார்த்தாலும் அவர் எப்படிப் பேசுவார் என்பதைப் பற்றியே பேச்சு. பிதற்றி, வரவழைத்தோர் வெட்கப்படுமாறு செய்ய மாட்டாரா என நினைந்து நின்றாரும் உளர். இருநிறத்தாரது ஒற்றுமையும் இவரது பிரசங்கத்தைப் பொறுத்திருக்கிறது. அதனைச் சென்று காண வேண்டும் என வெளியூரினின்றும் வந்திருந்தோர் பலர். தென் வெள்ளையர், வடவெள்ளையர், நீகிரோவர் எல்லாரும் வந்திருந்தார்கள். ஒருவருக்கும் இழிவு வாராது பேச வேண்டிய பொறுப்பு மிகப் பெரியதொன்றே. புக்கர் முதல் நாளிரவு உறங்கினாரல்லர்.

கூற வேண்டியதை மீண்டுங் காலையில் ஒரு முறை பார்த்துக்கொண்டார்; கடவுளை வணங்கி, அவரது அருளைக் கோரிப் புறப்பட்டார். பிரசங்கம் புரியப் போகுமுன் எப்பொழுதும் அவர் கடவுளை இறைஞ்

சாது செல்வதில்லை. பொருட்காட்சிச் சாலைக்குப் புக்கர் மற்றைப் பெரியாரோடு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். ஊர்வலம் பிரசங்க மேடையை மூன்று மணிக்கப்பால் அடைந்தது. வெயிலின் கொடுமைக்கு இடையேயும், புழுக்கத்திற்கு இடையேயும், புறத்தே வேர்வையோடு புக்கர் மேடைமீது வந்து சேர்ந்தார். எள் விழ இடமிராமல் மக்கள் குழுமியிருந்தனர். மண்டபம் பெரிதாயினும், போதாதிருந்தமையாற் பலர் வெளியேயும் நின்றுகொண்டிருந்தனர். புக்கர் நுழைந்ததும் நீகிரோவரெல்லாரும் விண் பிளக்கும்படி கை தட்டி வரவேற்றார்கள். வெள்ளையரும் அரை மனத்தோடு கை தட்டினார்கள்.

கவர்னர் புல்லக்கு (Bullock) என்பவரால் முதற்கண் பொருட்காட்சி திறந்து வைக்கப்பட்டது. அவர் பேசிய பின் பெரியார் வேறு சிலரும் பேசினர். புக்கர் பேச எழுமுன், அவர் நீகிரோவருடைய துணிகர முயற்சி, நாகரிகம் ஆகியவற்றின் பிரதிநிதி எனக் கவர்னரால் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டார்.

புக்கர் எழுந்து தமது நன்றியைக் கூறி விரிவுரை ஆற்றினார். நீகிரோவரும் வெள்ளையரும் ஒன்றுபட்டு வாழவேண்டும் என்பதைக் குறித்து அரிய முறையிற் சொல் சில இயம்பினார்; கைத்தொழில் வல்லானை

இகழாது போற்ற வேண்டும் எனப் பகர்ந்தார் ; செய்யுளியற்றுதலுக்குள்ள பெருமை நிலத்தை உழுதலுக்கும் உண்டு என்றார். இசை நாடக அரங்கங்களில் ஒத்த இடம் பெற்றுக் காசைச்செலவிட உரிமை பெறுவதினும் சிறப்பாக, அவ்வேளையில் நீகிரோவர் தொழிற் சாலையில் தக்க கூலி கொடுக்கப் பெறுதற்கு உரிமை அளிக்கப்பட வேண்டும் என்று விளம்பினார். பொருட் காட்சியில் வைத்துக் காட்டப்பெறும் பல்பொருட் டொகுதி பயக்கும் நன்மையிலும் பெரிதாகச் சாதி பேதத்தை ஒழித்தலும் வருக்க விரோதத்தை அகற்றலும் நலம் பயக்கும் என நவின்றார்.

புக்கர் பேசி முடிந்தவுடன் அவர் கையைக் குலுக்கிப் பலர் தத்தம் மகிழ்ச்சியைக் காட்டினர். கவர்னர் புல்லக்கு என்பவர்தாம் முதலில் அங்ஙனம் செய்தவர். அக்கட்டட மூலை முடுக்குகளிலெல்லாம் உவகையொலியே எழுந்தது. பற்பலர் வந்து வந்து புக்கரைப் போற்றினர். அவர் மேடையை விட்டு வெளியே செல்வது அருஞ்செயல் ஆகிவிட்டது. மறுநாட்காலை டஸ்கிக்குப் புக்கர் புறப்பட்டார். அட்லாண்டா முதல் டஸ்கிகி வரையுள்ள புகை வண்டி நிலையங்களில் எல்லாம் அவருடன் கைகுலுக்க ஆவலுடையவராய்ப் பலர் வந்து நின்றனர்.

ஐக்கிய மாகாணப் பத்திரிகைகளெல்லாம் அவரது

பிரசங்கத்தை வெளியிட்டு, ஆசிரியப் பகுதிகளிற் போற்றி எழுதின. ஐக்கியமாகாணத்தின் தலைவரே அத்தேசத்தின் அரசர் போன்றவர். அவரும் புக்கரது பிரசங்கத்தைப் படித்துப் பார்த்து, அதனைப் போற்றிப் புக்கருக்குக் கடிதம் எழுதினார். கிளீவ்லண்டு (Mr. Cleveland) என்ற அத்தலைவரது நட்பை அது முதல் புக்கர் பெறுவாராயினர்.

பல பத்திரிகைகள் புக்கரைக் கட்டுரை வரைந் தருளுமாறு வேண்டின. பிரசங்கச் சபையார் பலர் புக்கரைப் பேசுமாறு அழைத்தனர். ஒரு பிரசங்கச் சபை புக்கருக்கு ஐம்பதினாயிரம் டாலர் அளிப்பதாகச் சொல்லி, குறிப்பிட்ட காலம் அதனோடு இருந்து அவர் பிரசங்கங்கள் செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொண் டது. அவரது வாழ்க்கைத் தொண்டு டஸ்கிகீக்கே என உறுதி செய்யப்பட்டுவிட்டதாகவும், அக்கலா சாலையின் முன்னேற்றத்திற்காகவும் நீகிரோ வருக்கத் தாரின் முன்னேற்றத்திற்காகவுமே தாம் பேசும் போதெல்லாம் பேசுவது என்று கருத்துக்கொண்டிருப்ப தாகவும், தமது பிரசங்கத்திற்கு வாணிக மதிப்பு மாத் திரம் வைக்கும் ஒப்பந்தம் எதற்குந் தாம் கட்டுப்பட முடியாது என்பதாகவுந் தெரிவித்துவிட்டார்.

1897-ஆம் ஆண்டில், புக்கரை மற்றொரு மாபெருந்

கூட்டத்திற் பேசுமாறு அழைத்தார்கள். அக்கூட்டம் பாஸ்டனில் நடந்தது. ராபர்ட்டு கௌல்டு ஷா (Robert Gould Shaw) என்ற பெரியார் ஒருவர் தமது நாட்டிற் காகப் போரில் உயிரை விட்டதைப் போற்றி நினைப்ப தன் அறிகுறியாகத் தூண் ஒன்று நாட்டப்பட்டது. அவ்வேளையிற் பேசவேண்டுமென்றே புக்கர் அழைக்கப் பட்டிருந்தார். கவர்னர் வொல்காட்டு (Volcott) என் பாரே தலைமை தாங்கிப் புக்கரது பிரசங்கத்தைப் பாராட்டினார். அதனைக் கேட்ட மக்கள்தம் மெய்ப் பாட்டை ஏட்டில் எழுத ஒண்ணாது. புக்கரது பிரசங்க வன்மையின் அறிகுறி அஃதென்று சொல்லி அமைதலே அழகு.

பின்னரும், ஸ்பேனியர் அமெரிக்கப் போர் முடிந்த பின் நடந்த சமாதானக் கொண்டாட்டங்களுள் ஒன் றில், சிக்காகோ என்ற நகரிற் பேசுமாறு புக்கர் அழைக் கப்பட்டார். அம்மாநாட்டில் அவர் பிரசங்கத்தைக் கேட்ட மக்கள் முப்பதினாயிரவர் இருப்பார். ஐக்கிய மாகாணத்தலைவர் வில்லியம் மெக்கின்லி (Mr. William McKinley) என்பார் தம் அமைச்சரோடு அங்கு வந் திருந்தார். பிற தேசத்து அமைச்சருட்சிலரும் கப்பற் படைப் பணியாளர் பலரும் அங்கு வந்திருந்தனர். அங்கும் புக்கர் செய்த பிரசங்கம் போற்றப்பட்டது. அவர் சொற்பொழிவாற்றி வீடு திரும்பிய பிறகு, மறு

நாட்காலே, அவரை நாடி வந்து அவருடன் பேச விரும்பினர் பலரென்றால், அவரது சொல் மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டமை ஒருவாறு புலப்படும்.

புக்கர் எப்பொழுது பேசினாலும் தாம் டஸ்கிகீயிற் செய்து வரும் வேலையின் சிறப்பை உரைத்து அதற்கு ஆதரவு தேடுவார். அவருடைய சொற்பொழிவுகள் எல்லாவற்றிலும் உயிர் இருந்தது. அப்பொழுதைக்கப்பொழுது தம்முன் உள்ள சபையாருக்குத் தகுந்த முறையிற் பேசும் பெற்றி அவரிடத்து நன்கு அமைந்திருந்தது. கதை சொல்ல வேண்டிய வேளையிற் கதை சொல்லியும், பொருள் கூற வேண்டிய இடத்திற் பொருளை விளக்கமாக அறிவித்தும் வந்தமையால், புக்கருடைய சொற்பொழிவுகள் பாராட்டப்பட்டன. உண்மையென்று உணராதவற்றை அவர் கூறுவதில்லை; உண்மையை அஞ்சா நெஞ்சோடு அறைவர். இடர்ப்பாடு மிக்க இடங்களிற் சொற்களைத் தேர்ந்து ஆளுந் திறன் அவருக்கு வாய்த்திருந்தது. இக்காரணங்களாலும் அவருடைய சொல் வன்மை யாண்டும் போற்றப்பட்டது.

## 7. வாழ்க்கையின் பிற்பகுதி

முற்பகுதியிற் கூறப்பட்டபடி பல இடங்களுக்குச் சென்று பிரசங்கம் புரிய அவரது வேலையினிடையே எப்படி இயன்றது என்று புக்கரைப் பலர் கேட்டதுண்டு. அவர், "உன்னால் செய்ய முடிவதைப் பிறரைக் கொண்டு செய்துகொள்ளாதே," என்ற பழமொழியைப் புறக்கணித்து, "பிறரும் உன்னைப்போலச் செய்யக்கூடியதை நீ செய்யாதே," என்பதைக் கருத்திற் கொண்டு ஒழுகினார். டஸ்கிகீக் கலாசாலையின் வேலை ஒருவர் உண்மையைப் பொறுத்ததாக அமைக்கப்படவில்லை; ஒருவர் உள்ளாரோ இல்லையோ, நடைபெற வேண்டிய அனைத்தும் நடைபெற்றுவிடக் கூடியமுறையில் அமைக்கப்பட்டிருந்தன. ஆசிரியருங் குமாஸ்தாக்களும் கலாசாலையின் நிருவாகத்திற் பங்கெடுத்துக் கொண்டு ஒழுங்குபட நடந்து வந்தமையால், கலாசாலை ஆகிய இயந்திரம் கடிகாரம் ஓடுவதைப்போல இயங்கிக் கொண்டிருந்தது. ஆசிரியரிற் பெரும்பாலோர் கலாசாலையில் மிக்க பற்றுடையவராய் இருந்தனர். புக்கர் இல்லாத வேளையில், வாரன் லோகன் (Logan) என்ற பண்டாரத்தாரே பிரின்ஸிபால் வேலையைப் பார்ப்பார். 1893-ஆம் ஆண்டில், புக்கரால் மணந்துகொள்ளப்பட்ட மார்கரெட்டு ஜேம்ஸ் (Margaret James) என்ற ஆசிரியை, புக்கர் இல்லாத வேளைகளில் வாரன் லோகன்

செய்யுங் கடமைகளுக்கு நல்லுதவியாய் இருப்பார். எம்மெட் ஸ்காட்டு (Emmet Scott) என்ற செயலாளர், புக்கர் செல்லும் ஊர் யாண்டிருப்பினும், அவ்வூரில் இருந்தபடியே டஸ்கிகியில் நடக்குஞ் செய்திகளின் விவரங்களையெல்லாம் புக்கர் அறிந்துகொள்ளுமாறு அறிக்கைகள் அனுப்புவார்.

கலாசாலையின் ஒன்பது பகுதிகளின் தலைவர்கள் ஒன்பது பேர்களும் வாரம் இரு முறை கூடி நிருவாகத்தைப் பற்றி எண்ணுவர். அறுவர் உறுப்பினரா யுள்ள பொருளாதார வாரியத்தார் வாரம் ஒரு முறை கூடி அவ்வவ்வாரத்தின் செலவுகளை அறுதியிடுவர். மாதம் ஒரு முறைக்குக் குறையாமல் ஆசிரியர் அனைவருங் கூடி ஆலோசிப்பதுண்டு.

புக்கர் நாடோறும் தாம் முடிக்கவேண்டிய கடிதப் பொறுப்பையும் மற்றவற்றையும் அலுவலறையை விட்டுப் புறப்படுமுன் முடித்துவிட்டே செல்வார். அன்றையபாடு அன்றன்றே நிகழ்வது எத்துணைச் சிறப்புடைத்து! அவர் வேலைக்கு அடிமையாகாது வேலையை ஆளுந்திறமுடையவர் ஆனார். அதற்குக் காரணம், அவருக்கு அவரது வேலையின்பால் இருந்த அன்பே.

காலையில் அவர் வேலையைத் தொடங்கும்பொழுது,

கலாசாலையில் எல்லாம் இனிது முடியுமென்று நினைத்துத் தொடங்குவதுண்டு. ஆனால், எதிர்பாராத இடுக்கண்ணால் இன்பமின்றிப் போகவுங்கூடும் என்றும், அவர் இடையிடையே எண்ணுவார். கலாசாலையில் எங்கேனும் தீப்பிடிக்கவுங்கூடும். ஏதேனும் புகைந்து போகவுங்கூடும். யாரேனும் தம்மைத் திட்டவுந் திட்டுவர் என்றெல்லாம் நினைப்பது அவர் இயல்பு. ஆதலின்,

> "இன்பம் விழையான் இடும்பை யியல்பென்பான்
> துன்பம் உறுத லிலன்."

என்றதற்கேற்ப, அவர் கழிபெருந்துன்பமுற்றாரல்லர். மிகப் பெரியதொரு செய்தியைக் குறித்து முடிவு பண்ண வேண்டுமானால், அவர் அதனைச் சிந்தையில் வைத்து ஓரிரவு உறங்கி, ஏதேனும் வழி தெரிகிறதா எனப் பார்ப்பார். அன்றேல், மனைவியோடும் நண்பரோடும் கலந்து சூழ்ந்த பின், முடிவு செய்வார்.

புத்தகங்கள் படிப்பதில் அவருக்கு மிக்க விரும்பம் உண்டு. ஆனால், பொருளொடு புணராப் பொய்ம்மொழியை எடுத்துப் பார்ப்பதில்லை. செய்தித்தாள்களும் பெரியாருடைய வரலாறுகளுமே அவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்வன. ஆபிரகாம் லிங்கனைப் பற்றிய புத்தகங்களையுந் துணுக்குகளையுங் கட்டுரைகளையும் அவர் படித்திருந்தார் என அறிகின்றோம். பெரும்பா

லான புத்தகங்களை அவர் புகை வண்டிகளிலேயே படித்தார் எனவும் அறிகின்றோம்.

அவருக்கு ஓய்வு போன்றதும், பொழுது போக்காய் உள்ளதும் அவரது தோட்ட வேலையே. நிலத்தை அகழ்வதிலும், விதைகளை விதைப்பதிலும், பயிர்களைச் சுற்றிக் கொத்துவதிலும் அவர் நாடோறும் அரை மணியாவது கழிக்க விரும்புவர். இயற்கையைக் கண்டு மகிழ்ந்து அதிலிருந்து ஊக்கமும் உரனும் பெறமாட்டாத மக்களுக்காக அவர் இரங்குவதுண்டு. காற்பந்து கைப்பந்து முதலான விளையாட்டுக்களை அவர் வேட்டதில்லை. சீட்டாட்டத்தில் அவர் கறுப்புச் சிவப்பு அறியார். தம்முடைய புதல்வர் இருவரொடும் எப்பொழுதாவது கோலியாட்டம் மாத்திரம் ஆடுவார். எல்லாவற்றிலும் உயர்ந்த வகையில் அவருக்கு ஓய்வும், பொழுது போக்கும் அளித்தது அவர் இல்லத்தாருடன் அமர்ந்து அளவாளவும் மாலை நேரமே.

அவருடைய மனைவி மக்களெல்லாம் மாண்புடையவரே. மூன்றும் மனைவியாராகிய மார்கரெட்டு அம்மையார் பிஸ்கு(Fisk)ப் பல்கலைக் கழகத்திற் பட்டம் பெற்றவர். திருமணத்திற்குப் பல்லாண்டு முன்பே டஸ்கிகீயில் ஆசிரியையாய் வந்து அமர்ந்து திருமணக் காலத்திற் பிரின்ஸிபாலாய் இருந்தவர்; புக்கருக்குக்

கலாசாலை வேலைகளிற் பேருதவியாளராய் இருந்தவர். டஸ்கிகிப் பட்டணத்தில் தாய்மார் கூட்டங்கள் கூட்டியும், அதன் அருகே எட்டு மைல் தூரத்திலிருந்த ஒரு கூட்டத்தாருக்கு உழவுத் தொழில் கற்பித்தும் வந்தார் அவ்வம்மையார். கலாசாலையில், மகளிர் சங்கமொன்று ஏற்படுத்தி, மாதம் இரு முறை மகளிரெல்லாம் கூடிச் சிறந்த பொருள்களைக் குறித்து ஆலோசிக்க ஏற்பாடு செய்து வந்தார்.

போர்ஷியா என்ற மகளார் உடை செய்வதில் நல்ல பயிற்சி பெற்று, இசைக்கருவி வல்லுநராகி, டஸ்கிகீயில் உபாத்திமைத் தொழிலை மேற்கொண்டார். பேக்கர் தெலியபெரோ (Baker Teliaferro) என்ற மூத்த மகன் சிற்ப வேலையில் தேர்ச்சியுற்றான். எர்நெஸ்டு டேவிட்சன் (Earnest Davidson) என்ற கடைசிப் புதல்வன் பள்ளிக்கூடத்தில் புத்தகக் கல்வியும் கைத்தொழிற்கல்வியும் பெற்றுக்கொண்டு வந்ததோடமையாது, நாடோறுஞ் சிறிது காலம் பள்ளிக்கூட வைத்தியரோடு இருந்து வைத்தியத் தொழிலையும் கற்று வந்ததாக அறிகின்றோம். எனவே, புக்கருடைய மனைவி மக்களெல்லாம் புக்கரது வேலையில் ஒவ்வொரு விதத்தில் ஒவ்வொரு பங்கு எடுத்துக்கொண்டனர் என்பது புலனாகும்.

1899-ஆம் ஆண்டில் புக்கருக்கு வியப்பினை

விளைத்த செயலொன்று நிகழ்ந்தது. பாஸ்டன் ஊரிலிருந்து சிலர் ஏற்பாடு செய்து முடித்துக்கொண்டு, புக்கரை அவரது உடனலத்தின்பொருட்டு ஐரோப்பாவிற்குச் சென்று ஓய்வெடுத்து வருமாறு வற்புறுத்தி வேண்டினர். பாஸ்டனில் ஒரு கூட்டத்தில் அவர் பேசிய பொழுது மிகத் தளர்ச்சியுற்றிருந்தார் எனக் கண்டு, சில பெண்மணிகளும் கேரிசன் (Mr. Carrison) என்பவருஞ் சேர்ந்து பணந் திரட்டி அவரை ஐரோப்பாவிற்குச் சென்று வருமாறு வேண்டிக்கொண்டனர். வேண்டியதோடு நிறுத்தாமல், அவசியம் போய் வர வேண்டுமெனச் சொல்லிக் கப்பலில் இடமும் திட்டஞ் செய்துவிட்டார்கள். தாமில்லாவிட்டால் டஸ்கிகீயில் ஒருகால் பணமுடை ஏற்பட்டால் என்ன செய்வார்கள் எனப் புக்கர் நினைத்தார். ஆனால், ஹிக்கின்ஸன் (Higginson) முதலான சிலர் புக்கர் வரும் வரையில், டஸ்கிகிச் செலவுக்கு வேண்டிய பணத்தைச் சேகரித்துவிட்டார்களெனப் புக்கர் அறிவிக்கப்பட்ட பின் அவர் தப்ப வழியில்லை.

ஆ! அடிமையிற்பிறந்து, அறியாமையில் தவழ்ந்து, வறுமையில் வளர்ந்து, உண்ண உறங்க உடுக்க நலங்களின்றி முன்னர் வாடிய புக்கருக்கு வாழ்க்கை நலமெல்லாம் வெள்ளையருக்கே உரியன என்று தோன்றிய காலம் உண்டு. அக்காலத்திலெல்லாம், அவர் ஐரோப்பா,

லண்டன், பாரிஸ் (Paris) முதலானவற்றை வானுலகை ஒப்ப மதித்து வந்தார். 'இப்பொழுது நாம் ஐரோப்பாவிற்குச் செல்வது உண்மையேயோ!' என ஐயமுறுவாராயினர். இளமையிலிருந்து ஓய்வு என்பதை அறிந்திலா அவர், இப்பொழுது மூன்று அல்லது நான்கு மாதங்களை வேலையின்றி எப்படிக் கழிப்பது என நினைப்பாராயினர். 1899 மே மாதம் 10-ஆந்தேதி அவர் நியூ யார்க்கிலிருந்து புறப்பட்டார். உடன் அவர் மனைவியாருஞ் சென்றார். பலர் வழியனுப்பினர். கப்பலில் மாலுமி முதல் சிறு வேலையாள் வரை எல்லாரும் புக்கரிடத்து அன்பு காட்டினர். புக்கர் கப்பலிலிருந்த பத்துப் பன்னிரண்டு நாளிலும், நாளொன்றுக்குப் பதினைந்து மணி நேரம் தூங்கினர். நிலத்திலிறங்கிய பின்னரும் அங்ஙனமே ஒரு மாதம் உறங்கினர். முன்னெல்லாம் காலையில் எழுந்தவுடன் எத்தனை அலுவல்கள் இருந்தன! எத்தனை ஊர்களுக்கு ஓடவேண்டியிருந்தது! எத்தனை பேரைப் பார்க்க வேண்டியிருந்தது! எத்தனை சொற்பொழிவுகளுக்குக் குறிப்பெழுதிப் பேச வேண்டியிருந்தது! ஓர் இரவில்தானே மூன்று இடத்தில் மாறி மாறிப் படுக்க வேண்டிய அவசியம் பிரயாணத்தால் ஏற்பட்ட காலம் முன்னெல்லாம் உண்டல்லவா? இப்பொழுது காலையில் எழுந்தவுடன், அப்படியெல்லாம் வேலைகள் இல்லையே எனப் புக்கர் நினையாமல் இருந்திருப்பாரோ?

பெல்ஜியத் தேசத்தில் ஆண்ட்வேர்ப்பு (Antwerp) என்ற ஊரை வங்கம் அடைந்தது. புக்கர் அவ்வூரைச் சுற்றிப் பார்த்த பின் ஹாலண்டு (Holland) என்ற தேசத்துக்குப் போய், ராட்டர்டேம் (Rotterdam), ஹேகு (Hague) முதலான ஊர்களைச் சுற்றிப் பார்க்குங் கால், ஆங்கெல்லாம் வரவேற்கப்பட்டார்; ஹாலண்டு தேசத்து உழுதூண் வாழ்க்கையையும் ஆடுமாடுகளின் செழிப்பையுங் கண்டு களிப்புற்றார்.

மீண்டும் பெல்ஜியம் போய், பிரஸ்ஸல்ஸ் (Brussels) வாட்டர்லூ முதலான இடங்களையும் பார்த்து விட்டுப் புக்கரும் அவர் மனைவியாரும் பாரிஸ் சென்றார்கள். பாரிஸ் பல்கலைக் கழகத்திற் புக்கர் ஒரு பிரசங்கம் செய்யுமாறு அழைக்கப்பட்டதற்கு இணங்கிப் பேசினார். இன்னும் பற்பல அழைப்புக்கள் வந்தன. ஆனால், புக்கர் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டால் தாம் வந்ததன் நோக்கம் கெட்டுவிடுமே என்ற எண்ணத்தால் இரண்டொன்றையே ஏற்றுக்கொண்டார்.

பாரிஸிலிருந்து லண்டன் மாநகரஞ் சேர்ந்தார். ஆண்டும் பற்பலர் அவரைப் பேசவும் உண்ணவும் அழைத்தனர். சிற்சிலவற்றையே அங்கும் ஏற்றுக் கொண்டார். எசக்ஸ் மண்டபத்தில் (Essex Hall) ஓர் அருமையான பிரசங்கஞ் செய்தார். அதனை

ஆங்கிலேயரும் ஆங்கிருந்த அமெரிக்கரும் போற்றினார் கள். புலவர்கள் சிலரின் விருத்தினராகப் புக்கர் இருந்து வந்தார். பிரிஸ்டல் (Bristol) லின்கண் மகளிர் சங்கத்தில் புக்கரும் அவர்தம் மனைவியாரும் பேசி மகிழ்வித்தார்கள். விண்ட்ஸர் மாளிகையில் (Windsor Castle) விக்டோரியா மகாராணியோடு புக்கரும் அவர் மனைவியாரும் ஒரு நாள் விருந்துண்டார்கள். புக்கர் பார்லிமெண்டு அங்கத்தினர் பலரைக் கண்டு உரையாடினர். அமெரிக்கரை விட ஆங்கிலேயர் வாழ்க்கையை முழுதும் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதையும், அவர்களது இல் வாழ்க்கை கடிகாரத்தைப்போல ஒழுங்காக நடைபெறு கிறது என்பதையும், அவர்கள் சட்டத்திற்குக் கட்டுப் பட்டு நடப்பதில் ஆர்வமுடையவர் என்பதையும் புக்கர் கண்டுகொண்டார். அமெரிக்க தேசத்திலே கதை சொல்லிக் கேட்போரை ஆண்டு மகிழச் செய்தது போன்று, ஆங்கிலேயரை மகிழ்விக்க முடியவில்லை. பின்னவர் விவரங்களை அறிந்துகொள்வதிலேயே கண் ணுங்கருத்துமாய் இருந்தார்கள். பிரசங்கங்கள் செய்த பிற்பாடு கப்பலேறிப் புக்கர் ஊர் திரும்புவாராயினர்.

இடையில், அவரைச் சார்லெஸ்டன் என்ற ஊரின் குடிகளும், மேலவர்ஜீனிய மண்டலத்தாரும் தங்கள் ஊருக்கு வந்து போகுமாறு அழைத்தனர். அவரும் இணங்கினார். எவ்வூரின்கண்ணே இளமையைக்

கழித்து, எவ்வூரினின்றும் பிறர் அறியாமல் அறியா மையும் வறுமையும் பின் தொடரப் புக்கர் சில்லாண்டு முன்னுற் சென்றுரோ, அவ்வூரின் குடிகளெல்லாம் ஒன்றுகூடி அவருக்கு இப்பொழுது பொது வரவேற்புக் கொடுப்பதென்ருல், அவரது உள்ளங் கனியாமல் இருக் குமா ? அங்ஙனம் வரவேற்று நின்ரேருட் புக்கரை முன்னுளில் அடிமையாக ஆண்டவரும் இருந்தனர் எனின், புக்கரது வாழ்க்கை மாண்பு என்னே ! என்னே! பிறகு, அவ்விதமாகவே புக்கர் அட்லாண்டாவிலும், நியூ ஆர்லியன்ஸிலும் (New Orleans) வரவேற்கப் பட்டுச் சிறப்பிக்கப்பட்டார்.

1896 ஜூன் 24-ஆந் தேதி ஹார்வர்டு (Harvard) பல்கலைக் கழகத்தார் எம். ஏ. பட்டத்தைப் புக்கருக்கு அளித்தார்கள். அப்பட்டம் அவர் செய்துவருந் தொண் டினைப் போற்றிக் கொடுக்கப்பட்ட கௌரவப் பட்ட மாகும். நீகிரோவருள் முதன்முதலாக அக்கௌரவப் பட்டம் பெற்றவர் அவரே. ஆனுல், அவர் நீகிரோ என்பதற்காகவோ அடிமையாகப் பிறந்தவர் என்பதற் காகவோ பாராட்டப்பட்டுப் பட்டம் புனையப் பெற்று ரல்லர். அவர் தென்றிசை மக்கள் முன்னேறுதற்கு வேண்டிய வகையில் தொண்டாற்றித் தமது சிறந்த அறிவையும் வண்மையையுங் காட்டியுள்ளார் ஆத லாலே அப்பட்டம் அவருக்குக் கொடுக்கப்பட்டது

எனப் பாஸ்டன் பத்திரிகை ஒன்று எழுதியுள்ளது.

இனி, 1898 டிசம்பர் 18-ஆந் தேதி டஸ்கிகிக் கலாசாலைக்கு நன்னாள் ஆயிற்று. அன்று ஐக்கிய மாகாணத்துத் தலைவர் மெக்கின்லி என்பாரும் அவரது மந்திரி சபையாரும் ஆங்கு வந்து பார்வையிட்டார்கள். புக்கர் டஸ்கிகிப் பள்ளிக்கூடந் துவக்கிய காலத்திலேயே ஒன்று நினைத்ததுண்டு. தாம் அமைக்கும் பள்ளிக்கூடம் ஒருநாள் தேசத் தலைவரால் வந்து பார்க்கத்தக்க அளவு தேசத்திற்குத் தொண்டியற்றுவதாக இருக்க வேண்டும் என்பதே அந்நினைப்பு. அஃது இப்பொழுது நிறைவெய்தியது. தேசத் தலைவர் அப்பள்ளிக்கூடத்தில் ஒரு நாள் தங்கிப் போவதற்காக மிக்க தொலையிலிருந்து வந்திருக்கிறார் என்ற செய்தி நீகிரோவர்க்குப் பெரியதொரு நம்பிக்கையையும் ஆதரவையும் மகிழ்ச்சியையும் அளிப்பதாயிற்று. டஸ்கிகி வெள்ளையருங் கொண்டாட்டங்களிற் கலந்துகொண்டனர். நேரத்தைச் சிக்கனப்படுத்தும் நோக்கத்துடன், கலாசாலையின் பகுதிகள் எல்லாவற்றையும் தேசத் தலைவர் ஒன்றரை மணி நேரத்திற் பார்த்து அறிந்துகொள்ளக்கூடிய முறையில் யாவும் அமைத்துக் காட்டப்பட்டன.

மெக்கின்லி எழுந்து தமது நன்றியைப் புக்கருக்கும் ஆசிரியர் பிறருக்குந் தெரிவித்துக்கொண்டு டஸ்கிகிக்

கல்லூரியையும் புக்கரையும் பாராட்டினூர். தேசத்தின் பல திசைகளிலும் டஸ்கிகிக் கலாசாலையின் இசை எட்டியிருத்தலைக் குறிப்பிட்டார். நீகிரோவர் பெருமையும் நற்பயனும் எய்த அமைக்கப்பட்ட கல்லூரியின் தலைவராகிய புக்கரது மதி நுட்பத்தையும், விடா முயற்சியையும், இடுக்கணழியாமையையும் போற்றினூர். எண்பொருளவாகச் செலச் சொல்லிப் பிறர் கூறும் நுண்பொருளைக் காணும் புக்கரது அறிவுடைமையையும், ஆராய்ந்த சொல்வன்மையையும், தாளாண்மையொடு பொருந்திய வேளாண்மையையும் நேரிய முறையிற்பாராட்டினூர்.

டஸ்கிகீக் கல்லூரி வாழ்க்கை கீழ்க்காணுமாறு அமைக்கப்பட்டிருந்தது என அறிகிறோம். காலை 5 மணி, எழுதல்; 6 மணி, காலையுண்டி; 6-20 முதல் 6-50 வரை, அறைகளைத் தூய்மைப்படுத்தல்; 6-50 வேலைமணி அடிக்கப்பெறுதல்; 7-30 முதல் 8-20 வரை, காலைப் படிப்பு; 8-20, காலைப் பள்ளி மணி; 8-25, வரிசை வரிசையாக இளைஞரின் அறையைப் பார்வையிடுதல்; 8-40, வழிபடு நிலையத்திற் காலை வழிபாடு, 8-55, அன்றன்றைய செய்தியோடு ஐந்து நிமிடம்; 9 முதல் 12 வரை வகுப்பு; 12-15, உண்டி; பிற்பகல் 1 மணி, வேலை மணியடிக்கப் பெறுதல்; 1-30 முதல், 3-30 வரை, வகுப்பு; 5-30, வேலையை முடிக்க மணியடிக்கப்

பெறுதல் ; 6, இரவுச்சாப்பாடு : 7-10, மாலை வழிபாடு : 7-30 முதல் 8-45 வரை, மாலைப்படிப்பு ; 9-30 படுக்கச் செல்லும் மணி அடிக்கப் பெறுதல்.

இப்படி ஆடவரும் பெண்டிரும் எந்நேரமும் அங்குச் சுறுசுறுப்பாக இருப்பதாலும், வருகின்றவர்கள் எல்லாரும் கல்வியே நோக்கமாக வருவதாலும், அங்கு வம்பிற்கு இடமில்லை. முன்னர் இடிந்து கிடந்த சந்தைக் கூடத்திலும், கோழியறையிலும் ஒரு டாலர் காசின்றி ஆசிரியர் ஒருவரும் மாணவர் முப்பதின்மரும் இருந்து நடந்த பள்ளிக்கூடம், இப்பொழுது நாற்பதின் மிக்க அழகான கட்டடங்களை உடையதாய், இரண்டாயிரத்தைந்நூறு ஏக்கர் நிலமுடையதாய், நூறுயிரக்கணக்கான டாலர் பொருட்செல்வமுடையதாய், ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களையும் ஆசிரியர் நூற்றுவரையும் உடையதாய் விளங்குகிறது. நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்திற் பயிர் நிற்கிறது. முப்பது வகையின் மேற்பட்ட கைத்தொழில்கள் கற்பிக்கப்படுகின்றன. இரண்டு நூறுயிரம் டாலருக்கு மேலும் வைப்பு நிதி உளது. அதன் வட்டி ஆண்டு தோறும் வளருகிறது. ஆண்டு ஒன்றிற்கு அக்கலாசாலை நூறுயிரம் டாலர் செலவிடுகிறது. இருபத்தேழு மண்டலங்களிலிருந்தும் மாணவர் பலர் வந்து கல்வி பயில்கின்றனர். ஏறத்தாழ, மூவாயிரம் ஆண் பெண்

மாணவர் டஸ்கிகீயிலிருந்து இருபது ஆண்டிற்குள்ளே வெளி வந்து, ஆங்காங்கெல்லாம் மக்களின் பொருள், கல்வி, ஒழுக்கம், மதம் முதலானவற்றை எங்ஙனம் மேலோங்கச் செய்வது என வழி காட்டியுள்ளார்கள். அவர்கள் செல்லுமிடமெல்லாம் ஒற்றுமை உணர்ச்சியை எழுப்புகின்றார்கள். நிலம் வாங்கும் முறையிலும், குடியை உயர்த்தும் முறையிலும், பணம் சேமிக்கும் முறையிலும், கல்வி கற்பிக்கும் முறையிலும், ஒழுக்கம் ஓதுவிக்கும் முறையிலும் அவர்களாற் பற்பல நற்பயன் விளைந்துள.

இவற்றிற்கெல்லாம் காரணராய் இருந்து குணக் குன்றாய்த் திகழ்ந்த புக்கர் வாஷிங்குடன், ரிச்சுமாண்டு என்ற ஊரில் முன்னர்க் கங்குல் பல ஒரு தளத்தின் அடியே கழித்தார் என்று முன்னரே கண்டனமன்றோ ? அவ்வூரில்தானே, அவ்வூர்க் குடிமக்கள் 1900-ஆம் ஆண்டில் அவரை அழைத்துப் பிரசங்கம் ஒன்று புரியு மாறு வேண்டிப் பல விதமாகச் சிறப்புச் செய்தனர்.

“ இன்றுமை யின்ப மெனக்கொளின் ஆகுந்தன்
ஒன்னார் விழையுஞ் சிறப்பு.”

என்பது உண்மையாயிற்று.

இப்பெருந்தகையாளர் டஸ்கிகீயில் 1915-ஆம் ஆண்டு, நவம்பர் மாதம், 14-ஆந் தேதி வானுலகு ஏகினார்.

பிறந்த சாதி, குடி, சமயம் ஆயவற்ருல் உள்ள வேற்றுமைகளை நோக்காது, ஒழுக்கம், தாளாண்மை, வேளாண்மை ஆகியவற்றையே உலகம் நோக்கி மதிக்கும் என்பது புக்கர் வரலாற்ருல் அறியப்படுகின்றது, தமது நாட்டில் உள்ள மக்களுடைய பொருள், கல்வி, ஒழுக்கம் இவற்றிற்குத் தம்மால் ஆனதைச் சேர்த்து உதவுகின்றவர் எல்லாம் நாளடைவிற் போற்றப்படுவார் என்பதும் அறியப்படும்.

" இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்."

என்பதை உன்னுக. டஸ்கிகீக் கலாசாலையிற் புக்கரை நினைந்து வரும் அறிகுறியாக ஓர் உருவச்சிலை வைக்கப்பட்டிருக்கின்றது. அதன்கண் கீழ் வருமாறு பொறிக்கப்பட்டுள்ளது :—

" புக்கர் தி. வாஷிங்குடன்
1858—1915
அவர் தமது சமூகத்தின்
அறியாமையாகிய முகமூடியை அகற்றிக்
கல்வியாலுங் கைத்தொழிலாலும்
முன்னேற்றத்திற்கு உரிய
வழியைக் காட்டி
அழகுபடுத்தினர்."

" அருமை யுடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்."

என்பது பொய்யாமொழி அன்ருே ?"